# வஹ்ஹாபியத் தோற்றம் பாகம் 2

*ஆசிரியர்:* **எப்.எம். இப்றாஹிம் ரப்பானி ஆலிம் ரஹிமஹுல்லாஹு அன்ஹு**

கி.பி. 611ல் உலகை உய்விக்க வந்த உத்தமத் தூதர் ஸர்வரே ஆலம், ஸர்காரே தோஜஹான், நூரே முஜஸ்ஸம், காத்தமுன் நபிய்யீன், ஷபீவுல் முத்னிபீன், அஹ்மதுல் முஸ்தபா, முஹம்மதுல் முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது நபித்துவத்தை உலக மக்கள் முன் எடுத்துவைத்து…

சற்றேறக்குறைய 25 ஆண்டுகளில் மாநபியின் புனித மார்க்கத்தை ஏற்று இஸ்லாத்திற்குள் தம்மை இணைத்துக் கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 124000 மட்டுமே. அதன்பின் நபித்தோழர்களான உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் (கி.பி.649) இஸ்லாம் உலகளாவிய அளவில் பரந்து விரவி கிட்டத்தட்ட 4440 நாடுகள் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்து இணைந்தன.

இதில் இஸ்லாமிய மார்க்கத்தின் வெகுவேகமான வளர்ச்சி உலகில் இருந்த மற்ற மதவாத சக்திகளை திகைக்கச் செய்தது. யூத, கிறிஸ்துவ சக்திகள் எல்லாம் இணைந்து முஸ்லிம்களுக்கெதிராகவும், இஸ்லாத்தை நசுக்குவதற்காகவும் பல நூற்றுக்கணக்கான போர்களை நடத்தின.

இருந்தும் இஸ்லாத்தின் வளர்ச்சியை அச்சக்தியினால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆயுத பலத்தை மட்டும் நம்பி இஸ்லாத்தின் வளர்ச்சியை தடை செய்துவிடலாமென எண்.ணிய உலக வல்லரசுகள் தோல்வியைத் தழுவி பின்வாங்கி ஓடிற்று.

பலநூறு ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான யுத்தங்களை இஸ்லாத்திற்கெதிராக நடத்திப் பார்த்து ஒவ்வொரு யுத்தத்திலும் மண்ணைக் கவ்விய யூத, கிறிஸ்துவ சக்தி (வல்லரசு)கள் முடிவில் இஸ்லாத்தை பலவீனப்படுத்த, முஸ்லிம்களிடையே கருத்'து மோதலை உருவாக்குவதன் மூலம் அவர்களைத் துண்டாட, பிளவுபடுத்த குள்ளநரித்தனமான தந்திரத்தைக் கையாளத் துவங்கின.

இச்சதி திட்டத்தில் அன்று உலகில் வல்லரசுகளாகத் திகழ்ந்த இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி போன்றவை ஒன்றோடொன்று கைகோர்த்து செயல்படத் துவங்கின. அச்சதித் திட்டத்தின் முதல் நடவடிக்கைதான் அன்றைய இஸ்லாமிய நாடுகளில் தமது உளவாளிகளை முஸ்லிம்களின் வேடத்தில் உள்ளே நுழைத்ததன் மூலம், ஆட்சியின் எல்லா துறைகளிலும் இந்த உளவாளிகள் பெரும் பெரும் பதவிகளில் அமர்ந்ததாகும்.

இங்கே அதி முக்கியமான ஒரு விசயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்த தீய செயல்கள் மனிதனை பலவீனப்படுத்துமோ, மனித ஒற்றுமையை முற்றிலுமாக அழித்து நாசம் செய்து விடுமோ, மனித ஆன்மாவை

செயலற்றதாக்கிவிடுமோ அதைத்தான் இந்த இஸ்லாத்தின் எதிரிகளான வல்லரசுகள் உலக முஸ்லிம்களின் மீது தமது ஆயுதங்களாகப் பயன்படுத்தினர். ஆம். வாட்களும், வேலும், வில்லும், துப்பாக்கிகளும், தோட்டாக்களும் அழிக்க முடியாத, பிரிக்க முடியாத முஸ்லிம்களை இவைகள் அழித்தொழித்தன. பிரித்து விட்டன.

அவை மதுவும், மாதுவும், சூதாட்டமும்தான். இதில் மது, மாதுவை வைத்துத்தான் பல இஸ்லாமிய நாடுகள் மண்ணோடு மண்ணாக்கப்பட்டன. இன்னும் அதைக் கொண்டு தான் பிரிட்டிஷ் உளவாளி ஹம்ப்ஃரே முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தியை தனது சதித்திட்டத்திற்கு இசைவாகத் திருப்பினான். இதனை முதல் பாகத்தில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பற்றித்தான் முக்காலத்தையும் தெரிந்திருந்த முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்யும் விதமாக…

ان رسول الله صلي الله عليه وسلم قال وهو مستقبل المشرق ان الفتنة هاهنا ان الفتنة هاهنا ان الفتنة هاهنا من حيث يطلع قرن الشيطان (رواه مسلم)

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை கிழக்குத் திசையை நோக்கி, குழப்பம் அங்கிருந்துதான் உருவாகும். குழப்பம் அங்கிருந்துதான் உருவாகும். குழப்பம் அங்கிருந்துதான் உருவாகும். அங்கிருந்துதான் ஷைத்தானின் கொம்பு(வழிகேடு) வெளிப்படும் என்று கூறினர்.**

புனித இஸ்லாத்தை சர்ச்சைக்குரியதாக்கி முஸ்லிம்களிடையே சச்சரவை ஏற்படுத்தி ஒருவருக்கொருவரை விரோதிகளாயும் வைரிகளாயும் மாற்றுகின்ற குழப்பம் (பித்னா) கிழக்குத் திசையிலிருந்துதான் வெளிப்படும் என்ற நபிகளாரின் எச்சரிக்கையை நாம் சற்று கூர்ந்து கவனித்தால்…

கிழக்குத் திசையில் எத்தனை நாடுகள் இருக்கின்றதோ அவை அனைத்துமே இஸ்லாத்தை வேரறுக்கும் காரியத்தில் ஈடுபடும் என்பது கருத்தல்ல. மாறாக 'கிழக்கிந்திய கம்பெனி' என்னும் பெயரில் உலக முஸ்லிம்களுக்கு எதிராக லட்சக்கணக்கான உளவாளிகளைக் கொண்டு இஸ்லாமிய ஆட்சிகளை மண்மூடச் செய்து மார்க்கத்தில் பற்பல குழப்பங்களை ஏற்படுத்திய 'பிரிட்டிஷ் ஏகாதியத்தியத்தை' மேற்படி ஹதீஸ் நமக்கு எடுத்துக் காட்டினாலும் கிழக்குத் திசையில் எந்த இடத்திலிருந்து இஸ்லாத்திற்கெதிரான அக்குழப்பம் முளை விடும் என்பதை நபிகளாரின் மற்றோர் ஹதீஸ் நம்மை எச்சரிப்பதைப் பாருங்கள்.

اللهم بارك لنا في شامنا اللهم بارك لنا في يمننا فقالوا يارسول الله في نجدنا قال اللهم بارك لنا في شامنا الله بارك لنا في يمننا قالوا يارسول الله وفي نجدنا فاظنه قال في الثلأثة هناك الزلأزل والفتنة وبها يطلع قرن الشيطان (رواه البخاري)

இறைவா! எங்களுக்காக எமது ஷாமுக்கு பரக்கத்துச் செய்வாயாக!. இறைவா! எங்களுக்காக எமது எமனுக்கு பரக்கத்துச் செய்வாயாக! (அப்போது) யாரஸூலல்லாஹ்! எங்களின் நஜ்துக்கும் என்றனர். (மீண்டும் நபிகளார்) இறைவா! எங்களுக்காக எமது ஷாமுக்கு பரக்கத்துச் செய்வாயாக! இறைவா! எங்களுக்காக எமது எமனுக்கு பரக்கத்துச் செய்வாயாக! (மீண்டும் அவர்கள்) யாரஸூல்லாஹ்! எங்களின் நஜ்துக்(ரியாதுக்)கும் என்றனர்.
மூன்றாம் முறையாக அண்ணலார் அங்குதான் (நஜ்த்) திடுக்கங்களும், குழப்பங்களும் உருவாகும். அங்கிருந்துதான் ஷைத்தானுடைய கொம்பு உதயமாகும் என்று கூறினர்.

இந்த ஹதீஸில் குறிப்பிடப்படும் குழப்பங்களும், திடுக்கங்களும், ஷைத்தானுடைய கொம்பும் கிழக்குத் திசையிலுள்ள ‘நஜ்த்’ என்னும் பகுதியிலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நஜ்தில் பிறந்த முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் என்பவரைக் கொண்டு ஹிஜ்ரி 1143ம் வருடம் துவக்கிற்று.

இனி இந்த முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்பின் பிறப்பைப் பற்றி அப்துற்றஹ்மான் புகாரி என்பவர் சொல்வதாக சென்னையைச் சேர்ந்த ஹகீம் முஹம்மத் இஸ்மாயில் சாஹிப் என்பவர் தமது ‘மஜ்பூத்துல் ஈமான்’ என்னும் நூலில்…

நஜ்துப் பகுதியில் ‘தர்இய்யா’ என்னும் ஊரில் முஹம்மத் என்பவரின் தந்தை அப்துல் வஹ்ஹாப் என்னும் பெரியார் இல்மு, தக்வா, இபாதத் முதலியவற்றில் சிறந்தவராயிருந்தார். அவரது மனைவியும் நல்லவர். இந்நிலையில் ஒரு நாளிரவு இப்லீஸ் அப்துல் வஹ்ஹாபின் உருவில் அவனிடம் கூடிச் சென்றான்.

அப்பெரியாரும் அன்றிரவு தனது மனைவியை நெருங்க, அவர் தனது கணவனைப் பார்த்து சிரித்துக் கொண்டே சற்றுமுன் தானே உங்களின் நாட்டத்தை என்னிடம் நிறைவேற்றிக் கொண்டீர்களென்று சொல்ல, அவர் குழம்பிப் போய் இந்த ரகசியத்தை தனக்கு அறிவித்துத் தருமாறு இறைவனிடம் மன்றாடினார்.

நடந்த நிகழ்ச்சிகளனைத்தும் கனவின் வாயிலாக அவருக்கு அறிவிக்கப்பட்டதோடு, காப்பம் தரித்து விட்டதாகவும் அதனால் குழந்தை பிறக்கும்வரை தலாக் கொடுத்து அதன்பின் மார்க்கச் சட்டப்படி மணமுடித்துக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்பட்டார். அப்பெண்ணும் கவலையடைந்து அக்கருவை கலைக்க பல வகையிலும் முயன்று இயலாமற்போய் முடிவில் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபை பெற்றெடுத்தார்.

அல்லாமா செய்யித் அப்துல்லாஹ் இப்னு அலவீ ஹத்தாத் அவர்கள் முஹம்மத் பின் அப்துல் வஹ்’ஹாபின் கொள்கையை மறுத்து நூலொன்று எழுதியுள்ளார்கள்.

அந்நூலில் ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்களால் அறிவிக்கப்படும் ஒரு ஹதீஸைக் குறிப்பிடுகின்றனர். அது...

ரஸூல் ஸல்லல்லாஹுஃ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர், பனிரெண்டாம் நூற்றாண்டில் பனூ ஹனீபா என்னும் வம்சத்தில் ஒரு மனிதன் தோன்றுவான். அவனது செயல்முறை மிருகங்களைப் போன்றிருக்கும். அவன் காய்ந்தவை அனைத்தையும் தின்று விடுவான். அக்காலத்தில் கொலையும், இரத்தச் சேதமும் மிக அதிகமாக இருக்கும். அவன் முஸ்லிம்களது உடமைகளை தனக்கு ஹலாலென்று எண்ணி கொள்ளை கொள்வான். அப்பொருளைக் கொண்டே வாணிபமும் செய்வான். இன்னும் முஸ்லிம்களை கொலை செய்வதை ஹலாலென்று எண்ணி கொல்வதோடு, அதில் பெருமையும் அடிப்பான். ஒரு மாபெரும் குழப்பமும் நிகழும். அதில் கீழ்த்தரமானவர்ளெல்லாம் திரண்டு மிகைத்து விடுவார்கள். தாழ்ந்த பிறப்புள்ளோர் அவனுக்கு வழிபட்டு நடப்பர். எவ்வாறு நாய் தனது எஜமானனுக்குப் பின்னால் வாலை ஆட்டிக் கொண்டு செல்கிறதோ, அதுபோன்று அவர்கள் அவனுக்குப் பின்னால் செல்வார்கள்.
-நூல்: ஜல்லல் ழலாம் ஃபீ ரத்தி அலன் நஜ்தி அழல்லல் அவாம்.

**நஜ்தி பற்றி அவாரது ஆசிரியர்கள்.**

அல்லாமா சையித் ஜைனீ மக்கீ ரஹிமஹுஃல்லாஹ் அவர்கள் தமது நூலில் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் துவக்க கால கல்வியின் நிலை பற்றி இவ்வாறு கூறுகின்றனர்.

وكان محمدابن عبد الوهاب في مجتدأ امره يطلب العلم بالمد ينة واصله من بني تميم وكان من طلبت العلم بالمدينة يتردد بينها وبين مكة فاخذ عن كثير من علماءالمدينة منهم الشيخ محمدبن سليمان الكردي الشافعي فالشيخ محمدحيات السندي الحذفي وكان اشيخان المذكوران وغيرهما من اشياخه يتفرسون فيه الآلحاد والضلآل ويقولون سيضل هذا ويضل الله به من ابعده واشقاه فكان الآمر كذالك وماخطءت فراستهم فيه وكان والده عبدالوهاب من العلماء الصالحين وكان ايضا يتفرس في ولده المذكورالآلحاد ويذقه كثيرا ويحذرالناس منه وكذااخوه سليمان ابن عبدالوهاب فكان ينكر مااحداثه من البدع والضلآل والعقايءد الزا]غة وتقدم انه الف كتابا في الرد عليه وكانت ولآدة محمدابن عبدالوهاب سنة 1111الف وماة واحد عشرة وعاش عمرا طوبلآ بلغ عمرآثنين وتسعين سنة فانه توفي سنة الف وماتين وسنة

முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் தமது சிறுவயதில் மதீனாவில் கல்வி பயின்றார். அவர் பனீ தமீம் வமிசத்தைச் சார்ந்தவர். மக்காவுக்கும், மதீனாவுக்கும் அவர் பலமுறை சென்றிருக்கிறார். இதில் மதீனாவைச் சார்ந்த அதிகமான உலமாக்களிடம் கல்வி கற்றார். மதீனாவிலுள்ள உலமாக்களில் ஷைகு முஹம்மத் பின் சுலைமான் குர்தீ ஷாபி அவர்களும், ஷைகு முஹம்மத் ஹயாத் ஸனதீ ஹனபி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.
இன்னும் இவ்விரு உலமாக்களின்றி வேறு சில உலமாக்களும் தங்களின் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டு அவரிடம் இல்ஹாதும் மார்க்கத்தை விட்டும் புரண்டு போகின்ற நிலைக்குரிய அடையாளங்களைக் கண்டு,இவர் வெகு சீக்கிரம் வழிகெட்டுப் போய்விடுவார். மற்றவர்களையும் வழிகெடுக்கக் காரணமாயிருப்பார் எனக் கூறினர். அவர்களின் கணக்குத் தப்பவில்லை.

அவ்வாறுதான் நிகழ்ந்தது.
அவரது தந்தை அப்துல் வஹ்ஹாப் மிகுந்த அறிவாளியும் நல்ல நடத்தையுடையவராகவும் இருந்தார். அவரும் தனது மகனிடத்தில் இல்ஹாதையஉம் மார்க்கத்தை விட்டுப் புரண்டு போகின்ற வழிகேட்டிற்குரிய அடையாளங்களைக் கண்டு அவரின் கெடுதிகளைப் பற்றியும் வழிகேட்டைப் பற்றியும் ஜனங்களிடம் கூறி எச்சரிக்கையும் செய்தார். இவ்வாறே அவரது சகோதரர் சுலைமானும் அவரது தவறான கொள்கைகளை கண்டித்ததோடு அக்கொள்கைகளை மறுத்து நூலொன்றையும் எழுதினார். இவர் (முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்) ஹிஜ்ரி 1111 ல் பிறந்து நீண்ட காலம் ஜீவித்திருந்து ஹிஜ்ரி 1206 ல் தமது தொன்னூற்றி இரண்டாம் வயதில் இறந்து போனார்.

அண்ணல் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கண்ணியத்தைக் களங்கப்படுத்தி அவர்களின் மகத்துவத்திற்கு மாசு கற்பிக்கின்றவரின் பிறப்பு ஒருக்காலும் தூய்மையானதாகவே இருக்க முடியாது என்பதற்கு முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி மட்டும் ஒரு சான்று அல்ல.

மாறாக நபிகளாரின் காலத்தில் மதீனாவிலிருந்த வலீத் பின் முகையறா என்னும் முனாபிக் நபிகளாரை இழித்தும் பழித்தும் பேசினான். அவனைக் குறித்து இறைவன் திருக்குர்ஆனில்.....

عتل بعد ذالك زنيم

அவையனைத்திலும் குறையாதெனில் அவன் தவறான வழியில் (ஜினா) பிறந்தவவன்.. —குர்ஆன் சூறா கலம், வசனம் 13.

என்று கூறப்படுவதால் வெள்ளையரின் சதித்திட்டத்திற்கு உடந்தையாக துணை சென்ற முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபும் அவருடன் இணைந்த ‘தர்இய்யாவின் அமீராக இருந்த முஹம்மத் பின் ஸவூதும்’ தவறான முறையில்தான் பிறந்தவர்கள் என்பதை அவ்விருவரது சரித்திரமும் குர்ஆனும் உறுதிப்படுத்துகின்றனது. அதாவது முஹம்மது பின் ஸவூத் முஸைலமத்துல் கத்தாபுக்கும் ஸஜ்ஜாஹ்வுக்கும் மூன்று நாள் தவறான உறவில் தரித்த தலைமுறையில் பிறந்தவரென்று கூறப்படுகிறது. (பார்க்க: துஹ்பத்துல் வாயிழீன்)

ஹிஜ்ரி 1143ல் பிரிட்டிஷ் உளவாளிகள் மற்றம் பிரிட்டிஷாரின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் பக்கபலத்தோடு முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் 32ம் வயதில் தனது புதிய மத்ஹபை பிரகடனப் படுத்தினார். இதுபற்றி அல்லாமா ஜைனீ தஹ்லான் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,....

ولما اراد اظهار مازينه له اشيطان من البدعة والضلآلة انتقل من المدينة ورحل الي اشرق وصاريدع الناس الي التوحيد وترك الشرك ويزخرف لهم القول ويفهم ان ماعليه الناس كله شرك وضلآل ويظهر لهم عقيدته شيئا فشيئا فتبعه كثير من غوغاء الناس وعومالبوادي وكان ابتداء ظهورامره في الشرق سنة الف وماة بنجد وقراها فتبعه وقام بنصرته اميرالدرعية ابن سعود وخعل ذالك وسيلة الي اتباع ملكه ونفاذ امره فحمل اهل الدرعية علي متابعة محمدابن عبدالوهاب فيما يقول فتبعه اهل الدرعية ومال يطبعه علي ذالك كثير من

احياءالعرب حي بعد هي وفبيلة بعد قبيلة حتي قوي امره فحافته البادية فكان يقول لهم انما ادعوكم الي التوحيد وترك اشرك بالله ويزين لهم القول وهم بوادي في غاية الجهل لا يعرفون شيئا من امورالدين فاستحسنوا ماخاءهم به وكان يقول لهم اني ادعوكم الي الدين وجميع ماهو تحت السبع الطباق مشرك علي الاطلاق ومن قتل مشركا فله الخنة فتابعوه وصارت نفوسهم بهذالقول مطمئنة فكان محمدابن عبدالوهاب بينهم كالنبي في امته لايبركون شيئا ممايقول ولا يفعلون الا بامره ويعظمونه غايةالتعظيم واذا قتلوا انسانا اخذوماله واعطوالامر محمدابن سعود منه الخمس واقتس موا لباقي وكانوا يمشون معه حثيما مشي وياتمرون له بماشاء والامير محمدابن سعود يذفذكل مايقول خت اتسع له الملك وكانوا قبل اتباع ملكهم وتطاير شررهم ارادوالحج في دولة الشريف مسعودبن سعيدبن زيد وكانت ولايةالشريف سعود امارة مكة هجري1146 ستواربعين وماة والف ووفاتة سنة 1165 خمسة وستين وماة والف. فارسلوا يستاذنونه في الحج وغاية مرادهم اظهار عقيدتهم وحمل اهل الحرمين عليها فارسلوا قبل ذالك ثلاثين من علماءهم ظنامنهم انهم يفسدون عقائداهل الحرمين قدسمعوا بظهورهم في نجد وافسادهم عقائد البوادي ولم يعرفوا حقيقة ذالك. فلما وصل علماءهم مكة امرالشريف مسعودان يناظر علماء الحرمين العلماء الذين بعثوهم مناظروا الي عقائدهم فاذاهي مشتملة علي كثير من المكفرات فبعدان اقاموا عليهم الحجة والبرهان امرالشريف مسعود قاضي الشرع ان يكتب حجة بكفرهم الظاهر ليعلم به الاول والاخر وامربسجن الئك الملحدة الانزال ووضعهم في السلاسل والاغلال فقبض منهم جماعة وسجنهم وفرق الباقون وصلواالي الدرعيه واخبروا بما شاهدوا. فعتب اميرهم واستكبروا وفاءعن هذالمقصد وتاخر الي ان مضت دولةالشريف مسعود وتوفي سنة خمس وستين وماه والف وولي امارة مكة اخوه اشريف مساعدابن سعيد فارسلوا ايضا يستاذنونه في الحج فابي وامتنع من الاذن لهم فضعفت عن الوصول مطاباهم فلما مضت دولةالشريف مساعد وتوفي سنة اربع وئمانين وماة والف وولي امارة مكة اخره الشريف احمدابن سعيد فارسل اميرالدرعية جماعة من علماءهم فامرالعلماء ان يختبروهم فاختبروهم فوجدوهم لايتدينون الابدين الزنادقة فابي ان ياذن لهم في الحج ئم انتزع امارة مكة منه بن اخيه اشريف سرورين مساعد سنة ست وثماذين وماةالف . فارسلوا في مدتا لشريف يستاذنون في الحج فاجابهم بانكم ان اردتم الوصول اخذمنكم في كل سنة مثل مااخذ من الرافضة والاعاجم وزادة علي ذالك ماة من الخبل لجياد فعظم عليهم دفع ذالك وان تكونوا مثل الرافضة فلما توفي الشريف سرور سنة الف وماتين واثنين وولي امارة مكة اخوه الشريف غالب ارسلوا ايضا يستاذنون في الحج فمنعهم وتهددهم بالركون عليهم وجهز عليهم جيشافي سنة الف وماتين وخمسة وتتابع بينه وبينهم القتال والحرب من سنة الف وماتين وعشرين الي سنة الف وماتين وعشرين حتي دخلوامكة بعدان عجز عن دفعهم ووقع بينه وبينهم وقعات كثيرة قبل دخول مكة يطول الكلام بذكرها وكانوا في هذالمدةاتسع ملكهم وتطاير شررهم فملكوا جزيرةا العرب ثم الي ان ملكواما لين مدينةالنبي صلي الله عليه و سلم والشام والحلب والبغداد وملكوا ملكواالقبائل التي حولها ولما ملكوا الطائف في ذي القهدة سنة الف ومابين وسبعة عشر قتلوا لكبير والصغير والمامور والامر ولم ينج الامن طال عمرة . وكانوا يذبحون الصغير علي صدرامه ونهبوالاموال وسبوالنساء. وفعلوا اشياء يطول الكلام بذكرها ثم قصدوا مكة في المحرم من سنة الف وماتين وثمانية عشر ولم يكن للشريف طاقة لقاتلهم فترك لهم مكة ونزل الي جدة فخرج ناس من اهل مكة اليهم قبل دخولهم برحلتين واخذوامنهم الامان لاهل مكة فدخلوها بالامان . ثم تو جهوا الي جدة لقتال الشريف غالب فقاتلهم واطلق عليهم المدافعة فلم يستطيعوا دخول جدة فرتحلوا الي ديارهم في شهر صفر من سنة الف وماتين وثمانية عشر وابقربمكة من يقوم بحفظها من جماعتهم وفي شهر ربيع الاول من سنة المذكورة رجع الشريف غالف من جدة ومعه الباشا صاحب جدة وكثير من العساكرواخرج من كان بمكة من جماعتهم واستولي علي مكة كما كان ثم تتابع بينه وبينهم الحرب وغزوات الي سنة عشرين وماتين والف . فتقلبوا وملكوا جميع الاطراف وحاصروا مكة حتي اشتد البلاء وعم الغلاء واكل الناس الكلاب والجيفا. ثم عقدالشريف غلب معهم الصلح فدخلوا مكة بالصلح واستمر ملكهم بها الي سنة سبع وعشرين وماتين والف فامر السلطان محمودالوزير المعظم والمشير المفخم بمصر محمد علي باشا فجهز عليهم الجيوش حتي اخرجهم من

الحرمين ثم بعث الجيوش الي قتالهم في ديارهم وصارمع بعض الجيوش بنفسه حتي استاصلهم وقطع دابرهم وارخ بعض العلماء تاريخ خروجهم من مكة بقوله قطع دابر الخوارج هجري - 1272

இனி அவர்(முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்) தனது ஷைத்தானிய்யத்தான வழிகேடான நவீன (மத்ஹபை) வெளிப்படுத்த எண்ணியபோது மதீனாவை விட்டும் வெளியேறி கிழக்குப் பகுதிக்குச் சென்றார். அங்கிருந்த ஜனங்களிடம் மிக இனிமையாக மனதை ஈர்க்கும் வகையில் தவ்ஹீதைப் பற்றியும், ஷிர்க்கின் கெடுதியைப் பற்றியும் கூறியதோடு, தற்போதுள்ள மக்கள் ஷிர்க்கிலும், வழிகேட்டிலும் இருக்கிறனரென்றும் கூறினார்.

இவ்வாறு சன்னஞ் சன்னமாக ஒவ்வொருவரையும் சந்தித்து அவர்களிடம் தனது கொள்கையை சொல்லி வந்தார். எதுவரை எனில், கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்களின் ஒரு கூட்டம் அவரை பின்பற்றத் துவங்கியது.

முதன் முதலில் ஹிஜ்ரி 1143ல் அவரது நவீனக் கொள்கையை தாங்கிய மத்ஹப் கிழக்குப் பக்கமிருந்து துவங்கிற்று. ஹிஜ்ரி 1150 ல் வேகம் பிடித்தது. ஹிஜாஸ் மாகாணத்தின் சுற்றுப் புறங்களிலும் பிரபலமாயிற்'று. மற்றோர் பக்கம் தர்இய்யாவின் அமீராக இருந்த முஹம்மத் பின் ஸவூத் தனது ஆட்சியை விரிவுபடுத்தும் நோக்கத்தில் அவருடன் இணைந்து அவருக்கு உதவி செய்யவும் முன்வந்தார்.

தர்இய்யாவில் வசித்து வந்த மக்களை முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபைப் பின்பற்றுமாறு தூண்டினார். அதன் விளைவு தர்இய்யா மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் வாழ்ந்து வந்த மக்கள் அவருக்கு வழிப்படுவோராக மாறினர். இவ்வாறு அரபைச் சேர்ந்த பல்வேறு கிளைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவருக்குப் பின்னால் திரள, ஒரு ஜமாத்தென்னும் நிலைக்கு வளர்ந்து விட்டது. அத்துடன் அன்று ஜனங்களிடம் அவர், அவர்களின் உள்ளத்தைக் கவரும் வகையில் 'நான் உங்களை தௌஹீதின் பக்கமாக அழைக்கிறேன். இன்னும் ஷிர்க்கை விட்டும் உங்களை தற்காத்துக் கொள்ள எச்சரிக்கையும் விடுக்கிறேன் என இனிமையாகப் பேசியதால் மார்க்க கல்வியறிவற்ற அறிவீனர்களான கிராமவாசிகள் தவ்ஹீத் என்ற வார்த்தையைக் கேட்டு அவருக்குப் பின்னால் திரண்டனர்.

அந்த ஜனங்களிடம் அவர் நான் உங்களை உண்மை மார்க்கத்தின் பக்கமாக அழைக்கிறேன். இப்போது விண்ணின் கீழ் இருக்கும் அனைவருமே முஷ்ரிக்குகளாக உள்ளனர். உங்களில் யார் அவர்களை (முஷ்ரிக்குகளை) வெட்டுகிறாரோ அவருக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்று கூறினார். எதுவரையெனில், அம்மக்கள் அவருக்கு எத்தனை தூரம் கட்டுப்பட்டுவிட்டாரெனில், அவரின் கட்டளையன்றி எதுவும் செய்யாத நிலைக்கு அவருடன் இறுக்கமாகப் போயினர்.

முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் தகுதி எத்தனை உயர்ந்ததெனில் எவ்வாறு ஒரு நபீ தமது உம்மத்திற்கு மத்தியில் இருப்பாரோ, அவ்வாறு அவரைப் பின்பற்றுவோர் அவரைக் கண்ணியப்படுத்தினர்.

மேலும் அவருக்குக் கட்டுப்பட்ட, அவரை முழுமையாகப் பின்பற்றும் ஒரு கூட்டம் திரண்டபோது, அவர் முஸ்லிம்களைக் கொல்லத் துவங்கினார். முஸ்லிம்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் ஐந்திலொரு பாகம் தர்இய்யாவின் அமீர் முஹம்மத் பின் ஸவூதுக்கு வழங்கப்பட்ட பின் மீதமுள்ளதை தமக்குள் பங்கிட்டுக் கொள்வர்.

முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் எங்கு சென்றாலும் அவருடனேயே அவரது கூட்டமும் செல்லும். (பிரிட்டானிய உளவாளி ஹம்ப்ரேயின் வாக்குமூலப்படி அக்கூட்டத்தில் பெரும்பாலோர் முஸ்லிம்வேடங்களிலிருந்த வெள்ளையர்கள்தான்) அத்துடன் அவர் தமது கூட்டம் தனக்கு (இதா அத்) வழிப்படுகிறதென்றும் கூறி

வந்தார்.
தா்இய்யாவில் அமீா் முஹம்மத் பின் ஸவூத் அவா் வகுக்கும் திட்டங்களனைத்தையும் செயல்முறைக்கு கொண்டு வருவார். இதன் மூலம் அவரது ஆட்சியின் எல்லை விரிவடையத் துவங்கிற்று. இதில் இப்னு அப்துல் வஹ்ஹாபும், முஹம்மத் பின் ஸவூதும் ஆட்சி விரிவடைவதற்கு முன்னரே ஹிஜ்ரி 1146ல் ஹஜ்ஜு செய்ய விரும்பினார்.
அப்போது மக்காவில் மஸ்வூத் பின் ஸயீத் பின் ஸஃத் பின் ஜைத் என்பவா் ஷரீபாக(பரிபாலகராக) இருந்து வந்தார். (இவா் ஹிஜ்ரி 1165ல் மரணமடைந்தார்) நஜ்தைச் சோ்ந்த முப்பது உலமாக்கள் மக்காவுக்கு வருகை தந்து ஷரீபை சந்தித்து முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாபும், முஹம்மத் பின் ஸவூதும் மக்கா வந்து ஹஜ்ஜு செய்வதற்கு அனுமதி வேண்டுமெனக் கேட்டனா். வெளிரங்கத்தில் இவா்களின் நோக்கம் ஹஜ்ஜு செய்வதற்காக என்று சொல்லப்பட்டாலும் அந்தரங்கத்தில் அவா்கள் மக்காவிற்குள் நுழைந்து அங்குள்ள மக்களின் அகீதாவை மாற்றுவதாகவே இருந்தது. அஹ்லுல் ஹராமான மக்காவாசிகளுக்கு நஜ்துப் பகுதியில் பரவி வரும் அவா்களின் வழிகெட்ட தீய கொள்கையைப் பற்றி முன்பே தெரிந்திருந்தது.
கிராமவாசிகள் இவா்களின் 'தீய கொள்கையால்' வழிகெட்டுப் போய்விட்டனரென்று கேள்விப்பட்டாலும், அது எத்தனை தூரம் உண்மை என்பது தெரியாதிருந்தது. இந்நிலையில் நஜ்தைச் சோ்ந்த அந்த மௌலவிகள் மக்காவிற்கு வந்தபோது மக்காவின் ஷரீப் அவா்களை நோக்கி, உங்களில் முனாழரா (வாக்குவாதம்) செய்யும் தகுதியுள்ளவா் எவரேனும் இருப்பின் அவா் ஹரமுடைய உலமாக்களிடம் தமது நிலை உண்மையானது தான் என்பதை ஆதாரப்படுத்தட்டும் எனக் கூறி விடவே…
முனாழரா நடந்தது. அதில் அவா்க்ள பூசி மெழுகக் கூடியவா்களாகவும், அவா்களின் கொள்கைகளில் மிகுதமானவை குப்ராக இருப்பதையும் கண்டனா். அன்றி ஹரமுடைய உலமாக்களால் தொடுக்கப்பட்ட வினாக்களுக்கு அவா்களால் விடையளிக்க முடியாமல் இறுதியில் அவா்கள் அங்கிருந்து எப்படி ஓட்டம் பிடித்தார்களெனில், சித்தம் தடுமாறிய கழுதை ஓடியதைப் போன்று ஓட்டம் பிடித்தனா்.
ஹரமுடைய உலமாக்கள் அவா்களை வெற்றிக் கொண்டதைக் கண்ட ஷரீப் மஸ்வூத் காஜியிடம் மக்கள் அவா்களின் தவறான கொள்கையை புரிந்து கொள்ளும் வகையில் அவா்கள் மீது குப்ருடைய பத்வாவை வெளியிட வேண்டுமென்றும், அதைக் கொண்டு அவா்களை கைது செய்து சிறையில் அடைக்குமாறும் உத்தரவிட்டார். இதில் சில மௌலவிகள் சிறைப் பிடிக்கப்பட்டனா். மற்றவா்கள் ஓடிப் போயினா்.
திரும்பி ஓடியவா்கள் தா்இய்யா வந்து சோ்ந்து தா்இய்யாவின் அமீரிடம் (முஹம்மத் பின் ஸவூத்) நடந்தவை அனைத்தையும் கூற, இது கேட்ட அமீா் வெகுண்டாலும் பின்னா் வேறு வழியறியாது அமைதியாகிப் போனார்.
இந்நிலையில் ஹிஜ்ரி 1167ல் ஷரீப் மஸ்வூத் இறந்து விடவே, அவரது சகோதரா் முஸாஇத் அடுத்த ஷரீபானார். அவா் காலத்திலும் நஜ்துவாசிகள் மீண்டும் ஹஜ்ஜு வெசய்ய அனுமதி கோர, அவரும் மறுத்து விட்டார். ஹிஜ்ரி 1184ல் ஷரீப் முஸாஇதும் இறந்து போகவே அவரது சகோதரா் அஹ்மத் பின் ஸயீத் ஷரீபுடைய பதவிக்கு வந்தார்.
இவரது காலத்தில் மீண்டும் ஹஜ்ஜுக்கு அனுமதி கேட்டு சில மௌலவிகளை தா்இய்யாவின் அமீா் மக்காவிற்கு அனுப்பி வைக்க, மக்காவின் ஷரீப் அவா்களை

ஹரமுயைட உலமாக்களிடம் அனுப்பி வைத்தார். அவர்கள் அந்த நஜ்து உலமாக்கிழள்ன நாடியைப் பிடித்துப் பார்த்தபோது, அவர்களனைவருமே மார்க்கமற்றவர்களாக இருந்ததால் அனுமதி மறுக்கப்பட்டது.
இதற்கிடையே ஹிஜ்ரி 1186ல் ஷரீப் அஹ்மது பின் ஸயீதின் சகோதரி மகன் மஸ்ரூர் என்பவர் மக்காவை அவரிடமிருந்து கைப்பற்றி தாமே ஷரீபாகிவிட்டார். அவரது ஆட்சி காலத்திலும் நஜ்து வாசிகள் மீண்டும் அனுமதிகோர, அதற்கவர், ஒவ்வொரு ஆண்டும் ராபிஜிகளிடமிருந்து வரி வசூல் செய்வதைப் போல நீங்களும் வரி செலுத்த வேண்டுமென கேட்க, அத்தனை பெரும் தொகையை அவர்களால் கொடுக்க இயலாததால் மக்காவிற்குள் வர முடியாமற் போயினர்.
ஹிஜ்ரி 1206ல் ஷரீப் மஸ்ரூரும் காலமாகிவிட, அவரது சகோதரர் காலிப் மக்காவின் ஷரீபானார். அவரது காலத்திலும் நஜ்துவாசிகள் ஹஜ்ஜுக்கு அனுமதிகோர மக்காவின் ஷரீப் அவர்களுக்கு அனுமதி மறுத்ததோடு, அவர்களை பயமுறுத்தி எச்சரிக்கையும் செய்து அனுப்பினார். இதற்கிடையே ஷரீப் ஹிஜ்ரி 1205ல் நஜ்து மீது படையெடுத்தும் விட்டார். இப்போர் ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து 1220 வரை நடைபெற்றது. இறுதியில் ஷரீபின் படைகள் வலுவிழந்து போக நஜ்துப்படை மக்காவிற்குள் பிரவேசித்தது. அப்போது நடைபெற்றவைகளை வார்த்தைகளால் வார்க்க முடியாது.
மேலெழுந்தவாரியாக சொன்னால் அந்தப் பதினைந்து ஆண்டுகளில் நஜ்திகளின் ஆட்சி வெகுதூரம் விரிவடைந்திருந்தது. ஒரு ஜமாஅத் என்னும் கட்டுக் கோப்பு வலுப் பெற்றிருந்தது. இதன் மூலம் அவர்கள் அரபு மண்ணில் தமது கால்களைப் பலமாக ஊன்றிவிட்டிருந்தனர். அதன்பின் மக்கா மற்றும் மதீனாவையும் வளைத்துக் கொண்டனர். இதில் மக்காவை கைப்பற்றும்முன் மக்காவின் சுற்றுப்புற பகுதிகளைக் கைப்பற்றினர்.
ஹிஜ்ரி 1217ல் நஜ்திகள் தாயிபின் மீது படையெடுத்து சுற்றி வளைத்தனர். இப்போரில் தாயிபிலிருந்த வயோதிகர்களைத் தவிர மற்ற அனைவரையும் வெட்டிக் கொன்றனர். கைக்குழந்தைகளை அவர்களது தாய்மார்களின் நெஞ்சில் சாயவைத்து வெட்டினர். பொருட்களையெல்லாம் கொள்ளையடித்தனர். பெண்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். எத்தனை அழிச்சாட்டியமும், அராஜகத்தையும் கட்டவிழ்த்துவிட்டரெனில், அவை வார்த்தைகளின் வர்ணிப்புக்குள் அடங்காது. அத்தனை கொடூரம்.
தாயிபைக் கைப்பறிய பின்னர் ஹிஜ்ரி 1218ல் மக்காவை நோக்கி தமது பார்வையைத் திருப்பினர். முஹர்ரம் மாதத்தில் நடைபெற்ற அப்போரில் (முஹர்ரம் சிறப்புக்குரிய மாதமென்றும், அம்மாதத்தில் யுத்தம் செய்யக் கூடாதென்றும் திருக்குர்ஆன் கட்டளை பிறப்பிக்கிறது. ஆனால் யஜீத் பின் முஆவியா முஹர்ரம் மாதத்தில்தான் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு மற்றும் நபிகளாரின் குடும்பத்தினர்களுக்கு எதிராகப் போர் தொடுத்தான். அவன் வழிவந்த இந்த நஜ்திகள் வேறு எந்த மாதத்தை தேர்ந்தெடுப்பர்?) மக்காவின் ஷரீப் தாக்குப்பிடிக்க முடியாமல் மக்காவைவிட்டு ஜித்தாவுக்குப் போய்விட்டார்.
அதன்றி மக்காவாசிகளும் நிலைமையின் தீவிரத்தை ஒருவாறு புரிந்திருந்ததால், அவர்களும் மக்காவை விட்டு வெளியேறி உயிர் பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர். ஆதலால் எவ்வித ரத்த சேதமுமின்றி நஜ்துப் படை மக்காவை கைப்பற்றியது.
மக்காவை கைப்பற்றிய பின் நஜ்து படை தனது பார்வையை ஜித்தாவை நோக்கித் திருப்பியது. அங்கிருந்த ஷரீப் காலியை கொல்ல நினைத்தனர். ஆனால் காலிப் அதையறிந்து அதற்குரிய முன்னேற்பாட்டுடன் இருந்ததால் அவர்களால் ஜித்தாவுக்குள் நுழைய முடியவில்லை. ஹிஜ்ரி 1216 ஸபர் மாதம் சிலர் தமது தாயகம் திரும்பி விட்டனர் மற்றவர்கள் மக்காவிலேயே பாதுகாப்புக்காக தங்கி

விட்டனர்.
இந்நிலையில் ஹிஜ்ரி 1216 ரபீயுல் அவ்வல் மாதம் ஜித்தாவின் அரசரது படைத்துணையுடன் மக்காவின் ஷரீப் காலிப் மக்காவை மீண்டும் கைப்பற்றி, அங்கிருந்த நஜ்திகளை விரட்டியடித்தார். எனினும் ஹிஜ்ரி 1221 வரை தொடர்ந்து போர் நடைபெற்றது. இந்நிலையில நஜ்து படை மக்காவை சுற்றியிருந்த பகுதிகளை கைப்பற்றி மக்காவை முற்றுகையிட்டுவிட்டதால் மக்காவாசிகள் சொல்லொண்ணாத் துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாயினர். எதுவரை எனில், உண்ணக் கூடாத வஸ்த்துக்களையெல்லாம் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உண்டனர். முடிவில் வேறுவழியின்றி காலிப் அவர்களோடு சமாதானம் செய்து கொள் நஜ்துப்படை மீண்டும் மக்காவிற்குள் நுழைந்தது. இவையனைத்தும் ஹிஜ்ரி 1227 வரை நடந்திட்ட நிகழ்ச்சிகளாகும். இதையெல்லாம் கண்ட மிஸ்ரின் அரசர் மஹ்மூத் கான் தமது அமைச்சர் தம்ஷீர்கான் முஹம்மத் அலி பாஷாவுக்கு ஆணையொன்றை பிறப்பித்தார். அதில் அவர் மக்காவிலிருக்கும் நஜ்திகளை உடனே வெளியேற்றி மக்காவை தூய்மைப்படுத்த வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டிருந்தார். அதற்கொப்ப அவர் மக்கா மற்றும் மதீனாவிலிருந்த நஜ்திகளை மிகக் கொடூரமான முறையில் வெளியேற்றினார். அதன்பின் நஜ்தின் மீதும் படையெடுத்து அவர்களின் கோட்டையை தரைமட்டமாக்கி அவர்களை வேரறுத்தார். இவையனைத்தும் ஹிஜ்ரி 1227ல் நிகழ்ந்தவையாகும்.
-நூல்: அத்துரருஸ் ஸனிய்யா பக்கம் 41 முதல் 45 வரை.

அடுத்து அல்லாமா ஷாமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது நூலான துர்ருல் முக்தார் பாகம் 3, பக்கம் 319ல் நஜ்திகளின் நிலைகளைக் குறித்து…

எங்களின் காலத்தில் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபைப் பின்பற்றும் கூட்டமொன்று நஜ்திலிருந்து வெளிப்பட்டு ஹரமைனை(மக்கா, மதீனாவை) கைப்பற்றினர். அவர்கள் தம்மை ஹன்பலி மத்ஹபைப் பின்பற்றுவோர் எனக் கூறிக் கொண்டனர். ஆனால் அவர்கள் தங்களை மட்டுமே உண்மை முஸ்லிம்களென்றும், தமது கொள்கையை ஏற்க மறுப்போரை முஷ்ரிக்கென்றும் கூறினர்.

இதன் காரணமாக அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தை சேர்ந்தவர்களையும், மற்றும் சுன்னத் வல் ஜமாஅத்தின் உலமாக்களையும் கொல்வது ஆகுமான ஒரு செயலென்று நம்பினர். எதுவரை எனில், அல்லாஹ் அவர்களின் பெருமையை முறித்தான். இன்னும் அவர்களின் நகரங்களை நிர்மூலப்படுத்தி அவர்களுக்கெதிரான இஸ்லாமியப் படைக்கு வெற்றியும் தந்தான். இச்சம்பவம் ஹிஜ்ரி 1233ல் நடைபெற்றது.

இந்த இடத்தில் அண்ணல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது சமூக மக்களை எச்சரித்துள்ள மற்றோர் எச்சரிக்கையையும் பாருங்கள். அப்போதுதான் நபிகளாரால் எச்சரிக்கப்பட்ட நபர் யார் என்பதில் உங்களுக்குள்ள சந்தேகம் முற்றிலும் நீங்குமென எண்ணுகிறோம். அந்த ஹதீஸ் இதுதான்…..

قال مات النبي صلي الله عليه وسلم وهو يكره ثلآثة احياء ثقيف ويني حنيفة وبني امية

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும்

மூன்று கோத்திரத்தினரை வெறுத்தனர். அவர்கள் ஸகீப், பனூ ஹனீபா, பனூ உமைய்யாவாகும். –நூல்: திர்மிதீ.

இந்த ஹதீஸை நாம் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் பனூ ஹனீபாவின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். நபிகளாரால் வெறுக்கப்பட்ட குலத்தில் பிறந்த இவர் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டு தவணை முறையில் பரிட்டனைச் சேர்ந்த இரு உளவாளிப் பெண்களுடன் விபச்சாரம் செய்து, மதுப் பழக்கத்திற்கும் அடிமையாகி இறுதியில் இஸ்லாமிய விரோதியான பிரிட்டானிய அரசுடன் ஒன்று சேர்ந்து அவர்கள் வகுத்துத் தந்த ஒரு நவீனமான புதிய மத்ஹபை பிரகடனப்படுத்தி, தனக்குத் துணையாக தர்இய்யாவை சேர்ந்த பிரிட்டிஷாரின் மற்றொரு கைத்தடியான முஹம்மத் பின் ஸவூதையும் சேர்த்துக் கொண்டு ஒரு பெரும் குழப்பத்தை உருவாக்கினார்.

**நஜ்தீ முஹம்மதின் நிலை:**

முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் துவக்க காலத்தில் தம்மை நபியென வாதித்த ‘முஸைலமத்துல் கத்தாப், ஸஜ்ஜாஹ், அஸ்வத் அஸனீ, தல்ஹா அஸதீ’ போன்றோரின் நூல்களை விரும்பிப் படிப்பவராயிருந்தார். இதன்பின் அவர் தன்மனதில் தம்மை ஒரு நபி என எண்ணத் துவங்கினார். எனினும் அதற்குரிய சூழ்நிலை அன்று இல்லாதிருந்ததால் தனது எண்ணத்தை உள்ளத்திலேயே மறைத்துக் கொண்டிருந்தார். இருப்பினும் அதற்குரிய ஏற்பாடுகளை அவர் சிறிது சிறிதாக செய்து வந்தார்.

அவரது கொள்கையை ஏற்றவர்கள் எவரேனும் வெளியூர்களிலிருந்து வந்தால் அவர்களை முஹாஜிர்கள் என்றும், உள்ளூரில் இருப்போரை அன்ஸாரிகள் என்றும் கூறுவார். இவ்வாறே அவரிடம் பைஅத்து (உடன்படிக்கை) செய்வோர் அதற்குமுன் ஹஜ்ஜு செய்திருந்தால் அந்த ஹஜ்ஜை அவர் செய்யும்போது முஷ்ரிக்காக இருந்ததால் அது நிறைவேறாதென்றும் மீண்டுமொரு ஹஜ்ஜு செய்யவேண்டுமென வலியுறுத்துவார்.

இவ்வாறே அவரது புதிய மத்ஹபை ஏற்க வருவோருக்கு முதலில் கலிமாவை சொல்லிக் கொடுத்து (இதைத்தான் இன்று தப்லீக்வாதிகள் ‘கஷ்த்’ என்னும் பெயரில் செய்து வருகின்றனர்) அதன்பின் அவரை நோக்கி இதற்கு முன்புவரை நீ காபிராக இருந்தாய் என்றும் உனது பெற்றோர்கள் காபிர்களாக இருந்தனரென்றும், சில குறிப்பிட்ட உலமாக்களின் தலைவர்களது பெயரைக் கூறி அவர்களனைவரும் காபிர்களாக இருந்தனரென்றும் சொல்லச் சொல்வார். வந்தவர் சொன்னால் சரி. மறுத்தால் அவரை கொன்று விடுவார்.

இன்னும் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் கடந்த ஆறு நூற்றாண்டுகளாக வாழ்ந்த முஸ்லிம்கள் அனைவருமே காபிர்களாகத்தான் வாழ்ந்தனர் எனவும் பேசிவந்தார். அவரை அவரது புதிய மத்ஹபை ஏற்க மறுப்போரை அவர் காபிர்களென்றும் கூறினார். அவர் எத்தனை ஸாலிஹான நல்ல மனிதராக இருந்தாலும் சரி. அவர்களை முஷ்ரிக்குகள் எனக் கூறி கொன்று விடுவதுடன், அவர்களின் பொருட்களையும் சூறையாடி கைப்பற்றிக் கொள்வதை முபாஹான ஒன்றெனவும் கூறி செயல்பட்டார். (நூல்: தாரீக் நஜ்தோ ஹிஜாஸ்)

ஹிஜ்ரி 1218ல் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபைப் பின்பற்றும் வஹ்ஹாபிகள் மக்காவைக் கைப்பற்றி அந்நகருக்குள் பிரவேசித்த போது, முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் மைந்தர் அப்துல்லாஹ் என்பர் நூலொன்றை மக்காவாசிகளிடையே விநியோகம் செய்தார். அந்நூல் அவர்களது உண்மையான கொள்கையை வெளிப்படுத்திக் காட்டுவதால் அதிலிருந்து சிலவற்றை உங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

### வஹ்ஹாபிகளின் கொள்கை

1. முஹம்மதின் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கப்ரையும், அவரது மஸ்ஜிதுகளையும், அவரது நினைவுச் சின்னங்களையும், அதன்றி நபிமார்கள், வலிமார்கள் போன்றோரின் கப்ருகளையும், இன்னும் இந்த ‘விக்கிரஹங்களனைத்தையும்’ தரிசிப்பதற்காக பிரயாணம் செய்வதும், அவற்றை தவாப் (வலம் வருதல்) செய்வதும், அவற்றின் சுற்றுப் புறங்களை கண்ணியப்படுத்துவதும், அங்குள்ள வேட்டைப் பொருட்களை விட்டு விடுவதும், அங்குள்ள மரங்களை வெட்டாதிருப்பதும் மாபெரும் ஷிர்க்காகும்.

ايهاالمجا~ين لم لآ تقولون ياالله وهو معكم فاي حاجة ا لي المجيء الي محمد والرجوع اليه

2. ஏ! பைத்தியக்காரர்களே! நீங்கள் யா அல்லாஹ்! என்று ஏன் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? முஹம்மதிடம் வருவதற்கும் அவரை நோக்கி திரும்புவதற்கும் உங்களுக்கு அவர்களிடம் என்ன தேவை இருக்கிறது?

اعلموا ان اشرك قدشاع في هذالزمان وذاع والآمر قدأل الي ما وعدالله وقال ما ي{من من اكثرهم ياالله الآ وهم مشركون

3. புரிந்து கொள்ளுங்கள். இக்காலத்தில் ஷிர்க் பரவி விட்டன. இன்னும் விரிவடைந்தும் போய்விட்டன. இன்னும் நிலைமை எவ்வாறு மாறிவிட்டதெனில் அதைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான், மிகுதமானோர் அலலாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதுடன் அவனுக்கு இணையும் வைக்கின்றனர்.

فمن قال يارسول الله اس~لك اشفاعة يامحمد ادع الله في قضاء حاجتي يامحمد اسءل الله واتوجه الي الله بك وكل من ناداه فقداشرك شكااكبر

4. யாரஸூல்லாஹ்! நான் உங்களிடம் ஷபாஅத்தைக் கேட்கிறேன். முஹம்மதே! எனது நாட்டம் நிறைவேற அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். நான் உங்களை முன்னிறுத்தி அல்லாஹ்விடம் கேட்கிறேன். இன்னும் உங்களை வஸீலாவாக்கி அல்லாஹ்வை நோக்கி எனது முகத்தை திருப்புகிறேன் என்று யார் அவர்களை அழைப்பாரோ அவர் மாபெரும் ஷிர்க் செய்தவராவார்.

تم الزام الله علي المشركين الذين يسءلون المخلوقين وينادونهم مع زعمهم انهم ادون من الله اما السابقون حفالـآت والعزي والسراع واماالالآ حقون فمحمد وعلي وعيدالقادر والكل سواه

5. அல்லாஹ்வின் ஆதாரம் முஷ்ரிழக்குகள் மீது பூர்த்தியாகி விட்டதுன. இனி படைப்புக்களிடம் யார் கேட்கிறாரோ, அவர்களை அழைக்கிறார்களோ அதாவது அவர்கள் அல்லாஹ்வை விட அந்தஸ்த்தில் உயர்ந்தவர்களென்று கருதுகின்றாரோ, லாத், உஜ்ஜா, ஸுவாவு முன்பிருந்தன. இனி முஹம்மத் அலீ, அப்துல் காதிர் பின்னாலிலுள்ளன. ஆக இவையனைத்தும் சமமானவைகளே. -நூல்: அப்ஜத்துல் உலூம், கிதாபுத் தௌஹீது.

இஸ்லாமிய மக்களின் ஈமானை சிதைத்து மார்க்கத்தை மௌட்டீகத்திற்கு திருப்பிவிடும் பேராபத்திற்குரிய மேற்படி நூல் உலமாக்களின் பார்வைக்கு வந்தபோது உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் மொராக்கோ, ஜஸாயிர், லிபியா, தூனிஸ், மிஸ்ர், குதுஸ், ஷாம், ஈராக், துருக்கி, எமன் மற்றும் ஹிஜாஸ் மாகாணத்திலிருந்த உலமாக்கள் மிகக் கடுமையான கண்டனங்களை எழுப்பியதோடு மேற்படி நூலுக்கு மறுப்புரைகளையும் எழுதி இஸ்லாமிய மக்களை எச்சரித்தனர். அவர்களின் குறிப்பிடத்தக்க சில உலமாக்களின் பெயர்களையும் அவர்களின் நூல்களது பெயர்களையும் பாருங்கள்.

1. அல்லாமா முஹம்மத் பின் சுலைமான் குர்தீ ஷாபி. இவர் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் ஆசிரியர். இவர்கள் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் சகோதரர் அல்லாமா சுலைமான் பின் அப்துல் வஹ்ஹாபின் 'அஸ்ஸவாயிகுல் இலாஹிய்யா' என்னும் நூலில் மறுப்புரையும் எழுதியுள்ளார்கள்.
2. அல்லாமா அப்துல்லாஹ் பின் அப்துல் லத்தீப் ஷாபி. இவரும் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் ஆசிரியரே. இவர்கள் 'தஜ்தீதுல் ஜிஹாத் லி முத்தஇல் இஜ்திஹாத்' என்னும் பெயரில் மறுப்பு நூலொன்றை எழுதியுள்ளனர்.
3. அல்லாமா அ∴பீபுத்தீன் அப்துல்லாஹ் பின் தாவூத் ஹன்பலீ. இவர்கள் 'அஸ்ஸவாயிகு வர்ருவூத்' என்னும் பெயரில் மறுப்புரை எழுதினர். இந்நூலை பஸரா, பக்தாத், ஹலப், அஹ்ஸா போன்ற நாடுகளைச் சேர்ந்த உலமாக்கள் சரிகண்டு கையொப்பமிட்டுள்ளனர். இன்னும் 'ர∴ஸுல் கீமஹ்' என்னும் பெயரில் இந்நூலுக்கு ஓமனின் காழி விரிவுரை ஒன்றும் எழுதினார்.
4. அல்லாமா முஹம்மத் பின் அப்துர்ரஹ்மான் பின் அ∴பாலிக் ஹன்பலீ. இவர்கள் 'தஹல்லகுமுல் முகல்லிதீன பிமனித்தஆ தஜத்துதத்தீன்' என்னும் பெயரில் நூலொன்றை எழுதி முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபுக்கு அனுப்பினர். அவர் கடைசிவரை பதில் கூறவே இல்லை.
5. அல்லாமா அதா. இவர்கள் மக்காவின் உலமாக்களை சேர்ந்தவர்கள். 'அஸ்ஸாரிமுல் ஹிந்தீ ∴பீ உனுகின் நஜ்தீ' என்னும் நூலை எழுதினர்.

6. பைத்துல் முகத்தஸைச் சேர்ந்த உலமாக்களில் ஒருவர் 'அஸ்ஸுயூபுஸ் ஸிகால்' என்றொரு நூலை எழுதினார்.
7. அல்லாமா சையித் அலவீ பின் ஹத்தாத் என்பவர்கள் 'அஸ்ஸைபுல் பாத்திர் லி உனுக்கில் முன்கிரி அலல் அகாபிர்' என்னும் நூலை எழுதினார்.
8. அல்லாமா அப்துல்லாஹ் பின் இப்றாகிம் மீர்கனி என்பவர்கள் 'த.்.ரீமுல் அ.்.க்பியா'
9. அல்லாமா செய்யிது அப்துர் ரஹ்மான் இவர்கள் அஹ்ஸாவைச் சேர்ந்த பிரபலமான ஆலிம். இவர்கள் 67 கவிதைகளை மறுப்புரையாக இயற்றினர்.
10. அல்லாமா அஹ்மத் பின் அலீ குப்பானி பஸரீ ஷாபி
11. அல்லாமா அப்துல் வஹ்ஹாப் பின் பரக்காத்தி ஷாபி
12. அல்லாமா அப்துல்லாஹ் பின் ஈஸல் மவீஸி
13. ஷைகு அஹ்மத் மிஸ்ரீ அஹ்ஸாயீ
14. ஷைகு முஹம்மத் சாலிஹ் ஜம்ஜமீ ஷாபி. தலா ஒரு நூல் எழுதினர்.
15. அல்லாமா தாஹிர் சம்பல் ஹனபி 'அல் இன்த்திஸாருல் அவ்லியாயில் அப்ரார்'
16. முஹத்திஸ் அல்லாமா சாலிஹுல் புல்லானீ. இவர்கள் தம் ஊரிலிருந்து ஒரு நூலை மக்காவிற்கு கொண்டு வந்தனர். அதில் நான்கு மத்ஹபுடைய உலமாக்களும் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபுக்கு மறுப்புரை எழுதியிருந்தனர்.
17. ஷைகு முஹம்மத் பின் அஹ்மத் பின் அப்துல் லத்தீப் நூலொன்றை எழுதினர்.
18. தூனிஸைச் சேர்ந்த ஷைகுல் இஸ்லாம் அல்லாமா இஸ்மாயீல் தமீமி மாலிகி. இவர்கள் நூல் ஒன்றை எழுதினர். இவர்களின் இறப்பு ஹிஜ்ரா 1248.
19. அல்லாமா முஷக்கிக் ஸாலிஹ் கவ்வாஸ் தூனிஸி.
20. அல்லாமா முஹக்கிக் சையித் தாவூத் பக்தாதி ஹனபி.
21. முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் தமது கூட்டத்தினர் மொட்டையடிக்க வேண்டுமெனக் கூற, மறுத்தவர்களின் தலை மொட்டையடிக்கப்பட்டது. இதைக் கண்ட சையித் முன் அமீ என்பார் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் இச்செயலை கண்டித்து கவிதையொன்றை இயற்றினார். அதன் முதல் அடி....

   افي خلق رأسي بالسالكين والحد حديث صحيح بالآسانيد عن جدي

   என்ன? என் தலையை கத்தியைக் கொண்டு சிரைப்பதற்கும் இன்னும் அதை சட்டமாக்குவதற்கும் எந்த ஸஹீஹான ஹதீதாவது எனது பாட்டனாருடையது இருக்கிறதா? என்று வினவுகின்றனர்.
22. அல்லாமா சையித் முஹம்மத் இஸ்மாயீலுல் அமீர் அவர்கள் 'மஹுவுல் ஹுபத்தி .்.பி ஷரஹி அய்யாத்தித் தௌபத்தி' என்னும் பெயரில் வினாவிடை கவிதையொன்றை இயற்றினர்.
23. சையத் முஸ்தபா போலாத்தீ 126 கவிழைதகளை எழுதினர்.

24. அல்லாமா ஸம்னூதி இரு பாகங்களில் 'ஸமுதத்துத் தாரைன்' என்னும் நூலை இயற்றினர்.
25. அல்லாமா செய்யித் அஹ்மத் தஹ்லான் ஷாபி மக்கீ 'அத்துரருஸ் ஸனிய்யா'
26. அல்லாமா யூசுபுன் நபஹானீ 'ஷவாஹிதுல் ஹக்'
27. ஜமீல் ஸித்தீ பக்தாதி 'அல்பஜ்ருஸ் ஸாதிக்'
28. ஷைகு மஹ்தீ முப்தீ மொராக்கோ வஸீலாவில் மறுப்புரை எழுதினர்.
29. ஷைகு முஸ்தபா மிஸ்ரீ 'கௌஸுல் இபாத்'
30. ஷைகு இப்றாஹீம் காதிர் இஸ்கந்தரீ 'ஜலாலுல் ஹக்கி ∴பீ கஷ்பி அஹ்வாலி ஷிராரில் கல்கீ'
31. அல்லாமா செய்யிதுல் குர்ராமி 'அல் பராஹீனுஸ் ஸாத்திஆ'
32. அல்லாமா ஹஸன் ஹம்பலி திமிஷ்கீ 'அன்றுகூலுஷ் ஷர்இய்யத்தி ∴பிர்ரத்தி அலல் வஹாபிய்யா'
33. அல்லாமா ஷெய்கு முஹம்மத் ஹஸனைன் மகலூ∴ப் 'அத்தவஸ்ஸுலு பில் அன்பியாயி வல் அவ்லியா'.
34. ஷைகு ஹஸன் ஹஜ்பக் 'அல் மகாலாத்துல் வ∴பிய்யத்தி ∴பிர் ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா'
35. ஷைகு அத்தாவுல் கஸமி திமிஷ்கீ 'அல் அக்வாலுல மர்ழிய்யத்தி ∴பிர்ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா' என்னும் பெயரில் மறுப்புரை எழுதியுள்ளனர்.

**இஸ்லாமிய உலகுக்கு எதிராக யூத, சிறிஸ்துவர்களின் சதி!**

இறைவன் யாருக்கு நல்லருள் புரிந்துள்ளானோ அவர்கள் குர்ஆனை பற்றிய அறிவையும், அதை ஆய்வு செய்யும் விவேகமும் பெற்றுள்ளனர். இன்னும் அவர்கள் யூதர்களின் வரலாற்றையும், அவர்கள் நபிமார்களுக்கு செய்த துரோகத்தையும், விளைவித்த துன்பங்களையும், அண்ணல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிராகச் செய்த சதிகளையும் சூழ்ச்சியையும் நன்கு தெரிந்திருப்ப். அத்துடன் அண்ணலாருக்கு எதிராக இந்த யூதர்கள் தங்களின் சக்தி பலம் அறிவு முழுவதையும் பிரயோகித்தவர்கள் என்பதை குர்ஆன் இவ்வாறு விளக்கி காட்டிக் கொண்டுள்ளது.

ولن ترضي عنك اليهود ولآ الصري حتي تتبع ملتهم

இன்னும் நீர் அவர்களின் கூட்டத்தில் இணைந்து அவர்களின் மார்க்கத்தை பின்பற்றாதவரை யூதர்களும், கிறிஸ்துவர்களும் உம்மீது திருப்தி கொள்ளவே மாட்டார்கள். –அல்குர்ஆன் சூறா பகரா வசனம் 120.

இத்தனை தெளிவாக யூத, கிறிஸ்துவர்களின் நிலைகுறித்து குர்ஆன் சொல்லித் தந்த பிறகும எவராவது அவர்களை சிநேகிக்கவோ தொடர்பு கொள்ளவோ முயல்வார்களா? ஆனால் எனது மார்பில் அடித்துக் கொண்டு என்னை அழ விடுங்கள். இன்று வரலாற்றில் ஏடுகள் தொண்டைக் கிழிய அலறிக்

கொண்டிருக்கின்றன. திருக்குர்ஆனின் வசனங்கள் இறைவனின் இப்பகிரங்கமான எச்சரிக்கைக்குப் பின்னரும் எப்படிப்பட்ட விதிகெட்டவர்கள் அவர்கள்? தனது ஆட்சி அதிகாரத்திற்காக தனது எல்லையை விரிவுப்படுத்துவதற்காக குர்ஆனின் எச்சரிக்கையை தமது முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டு யூத, கிறிஸ்துவ ஆட்சியாளர்களின் காலடியில் தங்களின் தலையைத் தாழ்த்தி சரணடைந்தனர்.

இதில் விநோதம்! தம்மை தவ்ஹீதுடையோர் என உலகுக்கு பறைசாற்றியவர்கள் சிறிதும் வெட்கமின்றி ஈனமற்றவர்களாக ரோஷம் சிறிதுமின்றி முஸ்லிம் விரோத சக்திகளின் காலடியைத் தேடி தஞ்சமடைந்ததே.

ஆம்! இத்தகைய துரோகிகளை மார்க்கத்திற்கு எதிரான நயவஞ்சகக் கூட்டத்தை வரலாற்று ஏடுகளின் வெளிச்சத்தில் உங்கள் முன் அவர்களின் முகத்தை மூடியுள்ள திரையைக் கிழித்து காட்டுவோம். இவர்கள் முஸ்லிம்களென்னும் திரையை போர்த்திக் கொண்டு யூத, கிறிஸ்துவர்கள் இஸ்லாத்திற்கு எதிராகச் செய்த சதிக்கு துணை நின்றவர்கள். இந்த முஸ்லிம் வேடதாரிகளால் இன்று இஸ்லாமிய உலகைச்சேர்ந்த மக்கள் துண்டு துண்டாகிச் சிதறிக் கிடக்கின்றனர். இவர்கள் இஸ்லாமிய எதிரிகளோடு இணைந்து முஸ்லிம்களுக்காக அன்று வைத்த நெருப்பு இன்றும் முஸ்லிம்களின் உள்ளங்களில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டுள்ளது.

இதற்குமுன் பிரிட்டிஷின் எடுபிடியாக இருந்த முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்பைப் பற்றியும், அவரது புதிய மாாக்கம் பற்றியும், பிரிட்டிஷ் வடிவமைத்து முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் வாய் வழியாக வாந்தி எடுத்த புனித மார்க்கத்திற்கெதிரான நவீன கொள்கையைப் பற்றியும் பார்த்த நீங்கள் இப்போது பிரிட்டிஷாரின் மற்றொரு ஏஜெண்டான ஸவூதுடைய வம்சத்தாரின் அரசியல் பித்தலாட்டங்களையும் மோசடித்தனத்தையும் பிரிட்டனுக்கு தன்னை அடிமைசாசனம் செய்து கொடுத்துவிட்ட அவர்களின் அவலத்தையும் பாருங்கள்.

இவர்களின் ஆட்சி முஸ்லிம்களின் ரத்தத்தால், க.ஃ.பாவை களங்கப்படுத்தி, க.ஃ.பாவின் மீது போர்த்தப்பட்டிருந்த போர்வையை கிழித்தெறிந்து, அப்பாவி முஸ்லிம்களின் குரல்வளையை அறுத்து பெண்களின் மானத்தை சந்தியில் சிரிக்க வைத்து, குழந்தைகளை பெற்றதாயின் மார்பில் சாய்த்து வெட்டிக் கொன்று, உலமாக்களையும், நல்லவர்களையும் துவம்சம் செய்து அப்புனித இஸ்லாமிய சரீரங்களின் மீது சாய்த்து நிறுத்தப்பட்டதென்று செ சான்னால் வாசிப்போரான உங்களின் உள்ளம் பதறுகிறதல்லா? இவையனைத்தும் தாங்கள் சரணடைந்த இஸ்லாமிய எதிரிகளான குர்ஆன் எச்சரித்த யூத கிறிஸ்துவர்களை திருப்திபடுத்த என்று சொன்னால் உங்கள் கண்களில் ரத்தமே வருகிறதல்லவா?

ஆம்! உலக அரங்கில் இஸ்லாத்'தின் புகழுக்கு களங்கம் கற்பித்து, இஸ்லாமிய ஆட்சியை மண்ணோடு மண்ணாகக்கி முஸ்லிம்களை மாற்றானுக்கு காட்டிக் கொடுத்து தங்களின் ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்வதற்காக யூத கிறிஸ்துவ தீய சக்திகளுடன் கைகோர்த்து துரோகத்திற்கு இலக்கணம் வகுத்த சவூதி வம்சத்தாரின் தரங்கெட்ட வஞ்சகத்தனத்தைப் பாருங்கள்.

**உஸ்மானிய ஆட்சிக்கெதிராக பிரிட்டனுடன் இணைந்த சவூதிகள்:**

இத்தரங்கெட்ட இணைப்பை வரலாறு ரீதியாகக் காணும் முன் வாசகப் பெருமக்கள் ஒன்றை இங்கு அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அது, இரண்டாம் உலகப்போர் துவங்குவதற்கு முன்னால் ஸவூதுடைய வம்சம் பிரிட்டனுடன் இணைந்து விட்டது. இதுபற்றி முதல் பாகத்தில் உளவாளியின் ரிப்போர்ட் நமக்கு தெளிவுபடுத்துகிறது. அதனால்தான் கி.பி. 1902ல் இருந்து 1925 வரை இப்னு ஸவூத் துருக்கி மற்றும் அதை ஆதரித்த அரபுகளை விட்டும் ஒதுங்கியிருந்தார். அப்போது துருக்கி உலகப் போரில் உழன்று கொண்டிருந்த காலம். ஆனால் இங்கே ஸவூதுடைய வம்சத்தினர்களுக்கு பிரிட்டனிலிருந்து பொருளுதவியும் (பணம்) ஆயுதங்களும் வந்து கொண்டிருந்தது. மற்றோர் பக்கம் கர்னல் லாரன்ஸ் வருடக்க கணக்கில் அரபு மக்களிடையே துருக்கிக்கு எதிரான பிரச்சாரத்தை நடத்திக் கொண்டிருந்தார். விளைவு! அரபு மக்களும் துருக்கிக்கு எதிராகத் திரும்பி விட்டனர். உலகப்போரில் ஷரீப் ஹுஸைனும் துருக்கிக்கு துரோகம் இழைத்து தனது கிலாபத்தை பிரகடனப்படுத்திவிட்டார். இவையனைத்தும் இப்னு ஸவூதின் பலத்தை அதிகரித்தன. பிரபல வரலாற்று ஆசிரியர் ஸ்டான்லீ லேன்பூல் தனது 'துருக்கி ஆட்சியில் சவூதி மற்றும் பிரிட்டிஷின் இணைப்பு' என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்…

> அரபில் ஆங்கிலேயர்கள் பல்வேறு வழிகளில் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றினர். கர்னல் லாரன்ஸின் வருடக் கணக்கான மறைமுகச் சதி இறுதியில் வெற்றி பெற்றது. இன்னும் அரபு பிரிட்டானியாவின் தலைமையிலும், அரபு நேசனலிசம் என்னும் கோசத்திலும் துருக்கிக்கெதிராகத் த லைதூக்கிற்று. விளைவு! பிரிட்டனின் திட்டங்களால் அரபியர்களை துருக்கிக்கு எதிராகத் திருப்பி துருக்கியை முழுமையாக நிரந்தரமாக அரபு மண்ணிலிருந்தே மறையச் செய்துவிட்டது.
>
> இப்னு ஸவூத் துருக்கியின் மீது கொண்டிருந்த விரோதம் இன்னும் குறிப்பாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் கொண்டிருந்த நெருக்கமான உறவு மற்றும் உலக இஸ்லாத்திற்கெதிரான துரோகத்தை ஆதாரப்படுத்திய கிலாபத்தின் வரலாற்றாசிரியர் மர்ஹூம் மௌலானா முஹம்மத் அலீ கராச்சியில் கிலாபத் மாநாட்டில் கூடியிருந்த மக்களை நோக்கி…
>
> ஒருவேளை மக்காவின் ஷரீபான அமீர் பைசல் பிரிட்டிஷுக்கு எதிராகத் திரும்பிவிட்டால் ஆங்கிலேயர்கள் பாதுகாப்பின் முன்னெச்சரிக்கை கருதி வேறொரு கைத்தடியை தயாரித்து விட்டனர். அவர்தான் இப்னு ஸவூத். அவருக்கு அறுபதாயிரம் பவுண்டும், ஒன்பது இலட்சம் ரூபாயும் ஆண்டுதோறும் கொடுத்து வருகின்றனர். காரணம் அவசியமேற்பட்டால் அவரை மக்காவுடைய ஷரீபுடைய ஸ்தானத்தில் அமர்த்துவதற்காக.
>
> -நூல்: ஸலாத்தீனே துருக்கிய்யா, பக்கம் 487.

இந்த வரலாற்று உண்மையைத்தான் மண்ணில் மறைப்பதற்கு இன்று மானங்கெட்ட முயற்சிகளை சவூதியர் மேற்கொண்டு வருகின்றனர். சூரியனை கை கொண்டு மறைக்க முயல்வதைப் போல ரியாலின் பலத்தில் அந்த நஜ்திய துரோகக் கூட்டத்தை மார்க்கத்தின் காப்பாளர்களாக சித்திரித்துக் காட்டும் முயற்சியில் இன்று இந்தியத் துணை கண்டத்தில் சில உலமாக்களென்னும் போக்கிரிகள் முயன்று வருகின்றனர்.

அரபு இஸ்லாமிய கலீபாக்களின் வரலாற்றை கூர்ந்து கவனிப்போர் ஒரு உண்மையை கண்டிப்பாக ஒப்புக்கொண்டே தீருவர். அது, துருக்கி இரண்டாம் உலகப்போரில் மிகமிகத் தீவிரமாகவும், அதேசமயம் பொறுமையோடும் உழன்று கொண்டிருந்த நெருக்கடியான சோதனை மிக்க அந்தகாலகட்டத்தில் நஜ்தியக் கொள்ளைக் கூட்டம் தனது உலகத் தலைவரான பிரிட்டிஷாரின் வழிகாட்டுதலில் அரபு மண்ணிலிருந்து உஸ்மானியப் பேரரசின் அஸ்திவாரத்தை தகர்த்தெறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. இதற்குரிய அழுத்தமான ஆதாரம் உலகப் போரில் இப்னு ஸவூத் துருக்கிக்கு எதிராக சதி செய்ததும், பிரிட்டனின் கூலிப்படை ஏஜெண்டுகள் என்னும் பெயரில் துருக்கிக்கு எதிராக போரிட்டு வெள்ளையரை சந்தோஷப்படுத்த முனைந்திருந்ததே.

இது ஒரு வரலாற்று உண்மை. உஸ்மானியப் பேரரசில் அனைத்து இஸ்லாமிய சிற்றழசம் ஒருங்கிணைந்த போது, ஸவூத் பின் அப்துல் அஜீஸ் நஜ்தீ, ஹிஜாஸ் பகுதியை தாம் அரசாள வேண்டும் என்பதற்காக ஒரு சதித் திட்டத்தை தயார் செய்து வைத்திருந்தார். அதை நிறைவேற்றிக் கொள்ள துருக்கியை விரோதித்துக் கொள்வது அவருக்கு அவசியமாயிருந்தது. ஆதலால் உலகப்போரில் துருக்கி ஜெர்மனியுடன் இணைந்து போரிட்டுக் கொண்டிருந்தபோது நஜ்திகள் இதையே ஒரு பெரும் வாய்ப்பாகக் கருதி ஆங்கிலேயருடன் கைகோர்த்துக் கொண்டு துருக்கிக்கு எதிராக சதி வேலை செய்தனர். அதன்பின் துருக்கி போரில் தோல்வியைத் தழுவிட இப்னு ஸவூதுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் வெகுமதிகளை வாரி வழங்கிற்று. –நூல்: தாரீக் நஜ்தோ ஹிஜாஸ். பக்கம் 192.

இந்த வெகுமதிகளை பிரிட்டானிய அரசு வெறுமனே கொடுக்கவில்லை. மாறாக வரலாற்று ஏடுகள் இன்னும் கதறிக் கொண்டிருக்கின்றன. அது நஜ்தின் அப்துல் அஜீஸும் அவரது மகன் ஸவூதும் தாம் அரசாள வேண்டும் என்பதற்காக வருடக்கணக்கில் வெள்ளையருக்கு ஆதரவாக அவர்கள் காட்டிய வழியில் அநியாயத்தையும், அராஜகத்தையும் கட்டவிழ்த்து விடடு நர்த்தனமாடிக் கொண்டிருந்ததே. இன்னும் ஹிஜாஸ் போன்ற புனித மண்ணில் வாழ்ந்த மக்கள் (முஸ்லிம்கள்) மீது இவர்கள் நடத்திய கொடுங்கோன்மையை மனித வரலாறு இன்றும் இப்பிணந் கொத்திப் பறவைகளின் அட்டூழியங்களை கறுப்பு எழுத்தில் வரைந்து காட்டிக் கொண்டுள்ளது.

நவாப் சித்தீக் ஹசன் கான் போபாலி என்பவர் தனது ‘தர்ஜுமானே வஹ்ஹாபிய்யா’ என்னும் நூலில் பக்கம் 35ல் இவ்வாறு எழுதுகிறார்…

> ஸவூத் பின் அப்துல் அஜீஸ் தலைவர்களையும் (மக்காவின்) ஷரீப்களையும் வெட்டிக் கொன்றார். அத்துடன் கஃபத்துல்லாஹ்வின் திரையைக் கிழித்தெறிந்து, அங்கிருந்தோரை வஹ்ஹாபியக் கொள்கையை ஏற்குமாறு நிர்பந்தப்படுத்தினார்.

மீர்ஜா ஹைரத் தெஹ்லெவி என்பவர் தமது ‘ஹயாத்தே தையிபா’ என்னும் நூல் பக்கம் 302 ல் நஜ்திகளின் ஆட்சிப் பேராசையையும், துருக்கியருக்கெதிரான துவேசத்தையும் இப்படி வர்ணிக்கிறார்…

> அப்துல் அஜீஸுக்குப் பின் அவரது மகன் ஸவூத் தமது தந்தையை விட வேகமுள்ளவராக வெளிவந்தார். அவர் தனது ஆட்சியின் எல்லையை விரிவுப்படுத்தி துருக்கியப் பேரரசின் அஸ்திவாரத்தையே ஆட்டம் காண செய்தார்.

**துருக்கியர் மீது விரோதம், வெள்ளையருடன் உறவு!**

சவூதிகளின் கிறிஸ்துவ உறவையும் மற்றும் அமெரிக்க பிரிட்டானிய வல்லரசுகளுடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பையும் விபரிக்கும் ஜனாப் முஹம்மத் சித்தீக் குறைஷி தமது 'பைசல்' என்னும் நூல் பக்கம் 48ல் இப்படிக் கூறுகிறார்...

| |
|---|
| 1946 அக்டோபரில் அமீர் பைசலின் முயற்சியால் அமெரிக்காவின் ஏற்றுமதி வங்கி சவூதி அரசுக்கு வர்த்தகத்தில் தன்னிறைவு பெறுவதற்காக ஒரு கோடி டாலர் கடனாகத் தந்தது. 1947 ல் வெளியுறவுத்துறை அமைச்சர் சவூத் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததன் மூலம் இரு நாடுகளும் ஒன்றையொன்று நெருங்கி வந்தன. |

**கிறிஸ்துவர்களின் உதவியோடு முஸ்லிம்கள் கொல்லப்படல்:**

சவூதிகளது முஸ்லிம் விரோதத்தையும் கிறிஸ்துவ வெட்கங்கெட்ட உறவையும் விபரிக்கும் 'ஹயாத்தெ தையிபா'வின் ஆசிரியர் மீர்ஜா ஹைராத் தெஹ்லெவி மேலும் கூறுகிறார்...

| |
|---|
| ஸவூத் இருபதாயிரம் படைவீரர்களோடு சுலைமான் பாஷாவுடன் பல்வேறு போர்களில் வெற்றி பெற்றார். இன்னும் அப்படைகளுக்கு முன் துருக்கிய ஆட்சியாளரின் பருப்பு வேகவில்லை. |

முஸ்லிம்களான துருக்கி ஆட்சியாளருடன் விரோதமும், யூத,கிறிஸ்துவர்களுடன் பிணைப்பும் கொண்டிருந்த நஜ்திகள் (ஸவூத்) எத்தனை அகக்கண் குருடராயிருந்திருப்பர்? அதற்குக் காரணம் துருக்கியுடன் நல்லுறவு கொண்டிருந்த இப்னு ரஷீத் அமீர் ஜமாயிலின் பரம்பரை வெள்ளையர் மீது விரோதம் கொண்டிருந்ததே. இதில் நஜ்திகள் வெள்ளையர் தந்த உணவைத் தின்று அந்த உப்புக்கு நன்றி செலுத்தும் வகையில் அமீர் ஜமாயிலின் வம்சத்தினர் மீது கட்டவிழ்த்துவிட்ட, அக்கொடுங்கோன்மையை மௌலானா ஜபர் அலியின் வாயால் கேளுங்கள்...

| |
|---|
| மத்திய அரபுப்பகுதியில் 'ஹாயிஸ்' என்றொரு பகுதி. அப்பகுதியின் அமீரான இப்னு ரஷீத் வெட்டப்பட்ட அச்சோகமான செய்தி சில நாட்களுக்குப் பின் ஆங்கில ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. லண்டன் டைம்ஸ் தனது மே பத்தாம் தேதிய இதழில் அமீர் மக்ஃபூர் கொல்லப்பட்ட செய்தியை விபரித்து... போரில் இப்னு ரஷீத் துருக்கியருக்கு ஆதரவாக இருந்தார். இன்னும் இப்னு ஸவூத் இணைப்பாளர்களின் கூட்டமைப்பிலிருந்து விலகியிருந்தார். இப்னு ரஷீதின் வம்சம் பலகாலமாக வாளுக்கு இரையாகிக் கொண்டிருந்தது. இப்போது இப்னு ரஷீதின் வம்சமே முழுமையாக பூண்டற்று போய்விட்டது.<br>ஆதாரம்: அக்பார் ஜமீன்தார், 1920 ஜூன் 12.<br>தலைப்பு: நமது கிப்லாவை வஹ்ஹாபிகள் கொள்ளயைிட்டு விட்டனர். |

சவூதிகளின் முஸ்லிம் விரோதத்திற்கும் வெள்ளையரின் அடிமை சாசனத்திற்குமுரிய இன்னொரு ஆதாரத்தையும் பாருங்கள்:

| |
|---|
| இப்னு சவூதின் பத்திரிகை 'உம்முல் குரா'வின் எடிட்டர், உக்பா மற்றும் மஆன் |

போன்ற பகுதிகளை ஆங்கிலேயர் கைப்பற்றுமுன் இப்னு ஸவூதை சந்தித்து கேட்கிறார் இப்படி: அதாவது உக்பா, மஆன் போன்ற பகுதிகளுக்கு செல்ல வேண்டியிருந்த படை ஏன் அனுப்பப்படவில்லை? அதற்கு இப்னு ஸவூத் இன்னும் சிலநாட்களில் உக்பா மஆன் பகுதியிலுள்ள ஷரீப்களின் படைகள் அங்கிருந்து வெளியேறி விடுமென எங்களுக்குத் தெரியும் எனக் கூறினர். (அதன்பின்னரே ஆங்கிலேயப்படை ஷரீப்களின் படைகளை அங்கிருந்து வெளியேற்றியது).
நூல்: ஸியாஸத் நாளிதழி, லாகூர், 1925, அக்டோபர் 11.

மேற்கண்ட வரலாற்று உண்மைகளை இதுவரை பார்த்த நீங்கள் தான் தீர்ப்பளிக்க வேண்டும். இப்போது நீங்கள் நீதத்தின் தராசை உங்கள் கையிலேந்தி ஒரு கணம் யோசியுங்கள். எந்த கூட்டத்தை இஸ்லாத்தின் மற்றும் முஸ்லிம்களின் விரோதிகள் என்று திருக்குர்ஆன் சான்று பகர்ந்ததோ, அந்த விரோதிகளுடன் நேசம் வைப்பவர் அவர்களது விரல் நீட்டப்பட்ட திசையிலிருந்த முஸ்லிம் ஆட்சிகளை வேரறுப்பவர் மற்றும் முஸ்லிம் உலகுக்கெதிராக யூத கிறிஸ்துவர்களுக்காக உளவு பார்ப்பவர்! இவர்களா முஸ்லிம்களின் நன்மையை நாடுவோர்?

### முஸ்லிம்களுக்கெதிராக இப்னு ஸவூதின் துரோகம்.

மௌலானா ஜஃபர் அலி கான் அவர்கள் தமது பிரபலமான மாதஇதழ் 'ஜமீன்தார்' லாகூர் 1922 பிப்ரவரி இதழில் ஒரு நீண்ட கட்டுரையொன்றை மூன்று தலைப்புக்களில் பிரசுரம் செய்திருந்தார். அவை ஒன்று பிரிட்டனும், ஈராக்கும். இரண்டு: ரகசியம் அம்பலமாகிறது. மூன்று: உண்மையின் முகத்திரை கிழிகிறது என்பதாகும். இதை நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும். ஏனெனில் இதில் நஜ்தின் இப்னு ஸவூதுடைய இஸ்லாமிய விரோதமும், இஸ்லாமிய ஆட்சிகளுக்கெதிரான அவரது துரோக சதிகளும் அம்பலமாக்கப்பட்டுள்ளன.

### டைம்ஸின் நிருபர் தெஹ்ரான்வாசி எழுதுகிறார்.

துருக்கி எமது பிரிட்டனுக்கு விரோதியாயிருந்தது. இதனால் இப்போது எழுந்துள்ள கேள்வியாதெனில், அரபியரை துருக்கிக்கு விரோதமாக எவ்வாறு திசை திருப்பலாம் என்பதே. அன்றி ஸனூஸி எதற்குமே லாயக்கற்றதாக இருந்தது. ஏனெனில் அது அரபிய ஆட்சியில் பங்கு கொள்ளாதிருந்தது. இருப்பினும் அதனை நாம் ஆதரித்து வந்தோம். மிஸ்ரும் நடுவிலிருந்தது. அவர்களும் நம்மை விரோதிப்பவர்களாயிருந்தனர். இத்ரீஸ்களும், எமனுடைய இமாமும் எங்களுக்காக நிறைய செய்யக் கூடியவர்களாக இருந்தனர். இதற்கிடையே ஹாயிலின் அமீர் ரஷீத் துருக்கிகளுக்கு ஆதரவாக அவர்களுடன் சேர்ந்து விட்டார்.

இந்நிலையில் இப்போது எமது பிரிட்டானியப் பேரரசின் திட்டங்களை செயல்படுத்த ஒரு நபர்களைத் தவிர வேறு யாருமில்லை. அவ்விருவர் எங்களோடு கைகோர்த்து இணைந்தால், எங்களை ஆதரித்தால் அவர்களுக்கு மிகுதமான வெகுமதிகளைத் தரத் தயாராக ஏன்! வாக்குக் கொடுக்கவும் தயாராக இருந்தோம். அவ்விருவரில் ஒருவர் மக்காவின் ஷரீப் ஹுஸைனும், மற்றொருவர் நஜ்தின் அமீரான வஹ்ஹாபி இப்னு சவூதும் தான்.

இதில் இன்னொரு உண்மையாதெனில் இவ்விருவரும் ஒருவர் மற்றவரின் ரத்தத்தைக் குடிக்கத் துடித்துக் கொண்டிருந்தனர். அவ்விருவரின் நோக்கங்களும் லட்சியங்களும் வெவ்வேறாக இருந்தன. இன்னும் இவ்விருவரும் தங்களிஜ்

மார்க்கத்தை பின்பற்றும் கொள்கை விஷயத்தில் ஒருவருக்கொருவர் வாளை உயர்த்திக் கொண்டு நின்றதால் விஷயம் மிகவும் சிக்கலாகி விட்டடிருந்தது.

முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் பதினெட்டாம் நூற்'றாண்டில் ஒரு புதிய இஸ்லாத்தை கையிலேந்தி வந்தார். 1760ல் நஜ்தின் ஹாகிமாக (அதிகாரி) இருந்த சவூதை தனது கொள்கைக்கு மாற்றினார். அப்போதிருந்த பல சிறிய பெரிய கிளைகள் ஒன்றையொன்று விரோதித்துக் கொண்டிருந்தவை அவரது புதிய மத்ஹபை ஒப்புக் கொண்டன. அக்கிளைகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் தனது கொள்கையைப் பின்பற்றுவோரின் துணையோடு சவூதும் அவரது வாரிசான சவூத் பின் சவூதும் மத்திய அரபகத்தில் ஓர் விரிவான ஆட்சியை நிறுவிடத் தகுதி பெற்றனர்.

இரண்டாம் சவூதின் மைந்தன் 1801ல் கர்பலாவின் புனிதமிகு ஸ்தலங்களை நாசப்படுத்தி 1803ல் தனது படையை கிழக்குப் பகுதியை நோக்கி நகர்த்திச் சென்று மக்காவைக் கைப்பற்றினார். அங்கிருந்த புனிதமிக்க ஸ்தலங்களையும் நாசப்படுத்தி சிதைத்தார். 1804ல் அவர் மதீனாவைக் கைப்பற்றினார். மக்காவும், மதீனாவும் 1813 வரை வஹ்ஹாபிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. 1811ல் மிஸ்ரின் அரசர் முஹ ம்மத் அலீ பாஷா திடீரெனப் படையெடுத்து நஜ்தின் தலைநகரமான தர்இய்யாவைக் கைப்பற்றி அந்நகரத்தையே நிர்மூலமாக்கினார். இந்நிகழ்வுக்குப் பின் வஹ்ஹாபியரது ஆட்சி சில காலம்வரை அழிந்து போயிருந்தது. இப்னு சவூதின் வம்சத்தாரது உயிர் மிகக் கெட்டியாக இருந்ததால் மீண்டும் 1901ல் பதினெட்டு வயதே நிரம்பிய நஜ்தின் அமீர் பதினைந்துநபர்களுடன் இரவோடிரவாகச் சென்று நகருக்குள் பிரவேசித்து கண் இமைப்பதற்குள் இப்னு ரஷீதின் ஆமிலை (செயலர்) வெட்டிக் கொன்று இப்னு ஸவூதின் கொடியை ஏற்றினார்.

அதன் பின் நஜ்துடைய அமீர் என்னும் பெயரை பயன்படுத்தி தமது முன்னோர்களின் ஆட்சிக்குரிய பல இடங்களை கைப்பற்றினார். அவர் அல்ஹஸாவிலிருந்து துருக்கியரை வெளியேற்றினார். இன்னும் கிழக்குப் பகுதியில் பஹ்ரைனுக்கு நேரெதிராக இருந்த பந்தர்காஹ் வரையும், தெற்கே குவைத் நாட்டின் எல்லை வரை முன்னேறிச் சென்றார். ஆனால் மேற்கில் மக்காவின் ஷரீப் அவரை எதிர்த்தார். இன்னும் ஹிஜ்ரி 1110ல் நஜ்தின் மீது படையெடுத்தார். இதில் ஷரீப் தோல்வியைத் தழுவினாலும் தனது நாட்டின் எல்லை வரை மட்டுமே பின்வாங்கினார். எனினும் ஒருவர் மற்றவரை கொல்ல தருணம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

–ஆதாரம்: ஜமீன்தார், முதல் பக்கம் 1922, பிப்ரவரி 6.

## ஆங்கிலேயருடன் உறவு துருக்கியரோடு போர்!

இப்னு ஸவூத் ஆத்மார்த்த சகோதரத்துவ அமைப்பொன்றை உருவாக்கினார். இன்று வஹ்ஹாபியக் கொள்கைக்கு சேர்ந்துள்ள பலமனைத்தும் இந்த அமைப்பின் மூலமே கிட்டியதாகும். இன்னும் அவர் சகோதரத்துவ ஊர்களையும் ஏற்படுத்தினார். அவர்கள் வாட்களின் பலத்தால் அவர்களின் கொள்கையை ஏற்க மறுத்தவர்களைக் கூட தங்களின் சாதுர்யமான பேச்சினால் தமது கொள்கைக்கு மாற்றினர். அந்த அமைப்பைச் சேர்ந்த முபல்லிகுகளும் தலைவர்களும் மக்காவாசிகளை நிம்மதியிழக்கச் செய்து வந்தனர். இதனை இப்னு சவூத் ஹஜ்ஜிலும் பிரயோகப்படுத்தினார்.

பிரிட்டானியரின் செயல்பாடு

போர் மூண்டபோது தேசத்தின் நிலைமை எவ்வாறு இருந்ததெனில், பிரிட்டிஷ்வாதிகளான நாங்கள் மக்காவின் ஷரீப் மற்றும் இப்னு ஸவூதின் உதவியைப் பெற்றிட முயற்சி செய்தோம். அவர்கள் அப்போது துருக்கியருக்கு எதிராக வாட்களை உயர்த்தியிருந்தனர். வஹாபி இப்னு சவூது முன்பே நம்மை ஆதரிப்பவராகத் தான் இருந்தார். 1865ல் பிரிட்டனைச் சேர்ந்த ஒரு தூதர் கர்னல் லூயிஸ் என்பவர் ரியாதுக்குச் சென்று இப்னு சவூதின் கூட்டத்தாருடன் ஒப்பந்தம் ஒன்றை செய்தார். அந்த ஒப்பந்தம் எழுத்தில் குறிக்கப்படவில்லையாயினும் வஹாபிகள் அதனை செயல்படுத்துவது தங்களின் மீது கடமையென எண்ணியிருந்தனர்.

சுருங்கச் சொன்னால், இப்னு ஸவூதுக்கும் எங்களுக்குமிடைடே ய ஏற்பட்ட நெருக்கமான உறவு முன்பே நிலை பெற்றிருந்தது. துருக்கி அதன் பரம்பரை விரோதியாக இருந்து வந்தது. 1914ல் உலகப்போர் நிகழுமுன் இப்னு ஸவூத் போர் தொடுக்கத் தயங்கவில்லை. 1915 ஜனவரி மாதம் அவர் யுத்'தகளத்தில் இறங்கினார். ஆனால் அவருடன் போரில் ஈடுபட்டிருந்த கப்த்தான், ஷேக்ஸ்பியர் போன்றோர் கொல்லப்பட்டனர். அத்துடன் அவரது போர் வீரர்களில் சிலர் அவருக்கு இழைத்த துரோகத்தால் அவர் தோல்வியைத் தழுவினார். இப்போரில் இப்னு ஸவூத் மற்றும் பிரிட்டானிய அரசின் பலம் முழுவதும் நொறுங்கிப் போய்விட்டதால் அதன்பின் சிலகாலம் வரை நாங்கள் போரில் இறங்கவே இல்லை.

ஆதாரம்: ஜமீன்தார், 1922 பிப்ரவரி 7.

**பணப்பை**

எப்போது நமது திட்டம் மிக நீண்டதொரு ஆலோசனைக்குப் பின் நடைமுறைக்கு வரும்போது நாம் அப்போது அவர்களை ஒருகை பார்ப்போம். இராக்கின் அமீர் அரபு மண்ணில் இப்போது ஒரு புதிய மனிதனைப் போல் தோற்றம் தந்திருக்கிறார். நேரம் வரும்போது அவரும் நம்முன்னால் நிற்க முடியாது. இன்னும் ஆட்சியாளர்கள் அமீர் பைசலை நாட்டிற்குள் அனுப்ப வேண்டும் எனவும் தீர்மானித்தனர். இத்திட்டத்தில் பிரிட்டானிய அரசின்தொடர்பு உள்ளது என்பதை மக்கள் எவ்வகையிலும் தெரிந்து கொள்ளாதிருக்க வேண்டும். இதன்பின் அத்திட்டத்தை செயல்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மும்முரமாக முடுக்கிவிடப்பட்டன. இதில் இத்திட்டம் இப்னு ஸவூதை முள்ளாக நெருடத் துவங்கியது. எனினும் அவரைப் பணியவைக்க நாம் கையாண்ட முறை பணப்பையாகும்.

ஆதாரம்: ஜமீன்தார், 1922-பிப்ரவரி 10.

**பணம் பங்கீடு**

மற்றொருவர் இதுபற்றி பேசும்போது இரு வருடத்திற்குள் கர்னல் லாரன்ஸ் வஹாபிகளுக்கு ஒருபதாயிரம் ரூபாய்களை பங்கீடு செய்திருந்தார். அதன் பின் கர்னல் லாரன்ஸ் இத்தனைக்குப் பிறகும் கூட வஹாபிகள் ஹிஜாஸ் பகுதியைக் கைப்பற்றவில்லை. அவர்களுக்குப் பதில் நான் அங்கே இருந்திருந்தால் நானே இதுவரை அரசனாகி இருப்பேன் என்று கூறினார்.

ஆதாரம்: ஜமீன்தார் 1922, பிப்ரவரி 11.

அறுபதாயிரம் பவுண்ட் லஞ்சம்

இதற்குப் பிறகும் அவர் (நஜ்தி)கள் எங்களுக்கு போரின் கடைசி தருணத்தில் துருக்கியரை ஒடுக்கும் விஷயத்தில் மிக அதிகமாக உதவினர். இதில் அவர்கள் ஹிமார் மலைப்பகுதியையும், குவைத்தையும்ட அதன் பாதைகளையும் கைப்பற்றியதுடன் 1918ல் இப்னு ரஷீதின் நாட்டின் மீது படையும் எடுத்தனர்.

இதே ஆண்டில் இப்னு ஸவூத் (நஜ்திகள்) பக்தாதுக்கு ஒரு தூதரை அனுப்பினார். அவர், அவர்களிடம், இப்போது நாங்கள் பொறுமையிழந்து விட்டோம். ஷாஹ் ஹுஸைன் உடனடியாக தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவரைப் பழிதீர்க்க நாம் நிர்பந்திக்கப்பட்டவர்களாகி விடுவோம். அமீர் பைசலை பக்தாதின் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியது மாபெரும் அநியாயம். இப்னு சவூத் மிக மிகத் தெளிவாக, இரு எதிரிகளை எனக்கு முன் வைத்துக் கொண்டு நான் எப்படி கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியும்? இதன்றி எனது மூன்றாவது எதிரி அப்துல்லாஹ்வும் ‘மாவரா’வை கைப்பற்றிக் கொண்டிருக்கிறார் எனக் கொதிக்கவே...

தலைவர்களில் ஒருவர் (பிரிட்டிஷ் அதிகாரி) இப்னு ஸவூதுக்கு எழுதிய பதிலில், இப்னு சவூதை ‘நஜ்தின் அரசர்’ எனக் குறிப்பிட்டு நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. வருடந்தோறும் உங்களுக்கு அறுபதாயிரம் பவுண்ட் அதற்குப் பிரதியாக மாதாமாதம் வழங்கப்படும் என்று எழுதினார். இதன் மூலம் இப்னு ஸவூதின் வாயை அடைத்து விடலாமென பிரிட்டிஷார் நம்பினர்.

-ஆதாரம்: ஜமீன்தார் 1922 பிப்ரவரி 12.

**இப்னு சுவூத் மற்றும் பிரிட்டானிய ஒப்பந்தம்**

ஒப்பந்தம் ஒன்று:
நஜ்த், அஹ்ஸா, கத்தீ.்.ப், ஹுபைல் மற்றும் கலிஜ்பாரிஸ் போன்ற பகுதிகளும் அதன்பின் கட்டுப்பாட்டுக்குள் வரும் பகுதிகளும் சுல்தான் இப்னு ஸவூதின் பகுதிகளாகும். இன்னும் இப்பகுதிகளின் நிரந்தரமான ஆட்சியாளர்கள் இப்னு ஸவூதின் வம்சத்தினர் தானென்பதை பிரிட்டீஷ் அங்கீகரிக்கிறது. அன்றி அந்நாடுகள் மீதும் அங்குள்ள மக்கள் மீதும் அதிகாரம் செலுத்தும் முழு உரிமையும் ஆட்சியாளர்களுக்கு உண்டு. அவர்களுக்குப் பின் அவரது பிள்ளைகள் அதற்கு வாரிசாவார்கள். எனினும் அந்த வாரிசுகளில் அல்லது அவர்களில் ஒருவரது ஆட்சியின் அங்கீகாரம் எப்போது கிடைக்குமெனில், அவர் பிரிட்டீஷுக்கு விரோதமாக இல்லாதவராகவும், பிரிட்டனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

ஒப்பந்தம் இரண்டு:
ஒருவேளை ஏதாவது அந்நிய சக்திகள் இப்னு சவூதின் மீதோ, அவரது வாரிசுகள் மீதோ பிரிட்டனின் ஆலோசனையின்றி, அல்லது இப்னு ஸவூதுக்கு யோசிக்க அவகாசமளிக்காமலேயே ஆக்கிரமிக்குமேயானால் பிரிட்டிஷ் அரசு இப்னு சவூதுடன் கலந்து பேசி இப்னு சவூதுக்கு ஆதரவாக அந்த அந்நிய சக்திகளை எதிர்த்து யுத்தம் செய்யும். இன்னும் அத்தகைய சூழ்நிலையில் இப்னு சவூதின் நோக்கங்களையும், லட்சியங்களையும் பாதுகாக்க வேண்டிய திட்டங்களை

முன்னிறுத்தி செயலாற்றும்.

ஒப்பந்தம் மூன்று:
இப்னு சவூது இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதுடன் வாக்குப் பிரமாணமும் செய்கிறார். அதாவது அவர் வேறு எந்த அந்நியருடனும் அல்லது ஆட்சியாளருடனும் எந்த வகையான பேச்சுவார்த்தையோ நல்லுறவோ, ஒப்பந்தமோ செய்யக் கூடாது. அடுத்த ஆட்சி பரிபாலன விஷயத்தில் வேறு தேசத்தவர்கள் தலையிடுவார்களேயானால் அதைப் பற்றி உடனடியாக இப்னு ஸவூத் பிரிட்டிஷாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

ஒப்பந்தம் நான்கு:
இப்னு சவூத் உறுதியளிக்கிறார். எக்காரணம் கொண்டும் இந்த ஒப்பந்தத்திலிருந்து அவர் மாறவோ, மீறவோ மாட்டார். அது அவரது ஆட்சிக்குட்பட்ட தேசத்தை அல்லது அதில் ஏதேனும் ஒருபகுதியை பிரிட்டானிய அரசின் அனுமதியின்றி விற்கவோ, அடமானம் வைக்கவோ, அல்லது வேறு எந்த விதமாகவும் பயன்படுத்தவோ அவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.
அதன்றி அவரது ஆட்சியை அல்லது ஆட்சியிலுள்ள எந்த அதிகாரியையும் பிரிட்டிஷாரின் விருப்பத்திற்கு மாறாக ஆட்சியில் எவ்வித மாறுதலையும் அவர் கொண்டு வரக் கூடாது. இப்னு ஸவூத் உறுதியளிக்கிறார். அவர் பிரிட்டானிய ஆட்சியாரது கட்டளைக்கும் கீழ் படிந்து நடப்பார். அது அவருக்குப் பிடித்திருந்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி.

ஒப்பந்தம் ஐந்து:
இப்னு ஸவூத் உறுதியளிக்கிறார். அது புனித ஸ்தலங்களுக்கு போகும் எந்தப் பாதை தற்போது இருக்கின்றதோ அவை அப்படியே இருக்கும். இன்னும் இப்னு ஸவூத் ஹாஜிகளது வருகைக்குரிய காலங்களில் அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வார்.

ஒப்பந்தம் ஆறு:
இப்னு ஸவூத் தனக்கு முந்திய அரசர்களைப் போன்று உறுதியளிக்கிறார். அதாவது அவர் குவைத், பஹ்ரைன், ரூஸா, ஓமன் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் சில பகுதிகள் பிரிட்டனின் ஆதரவு பெற்றவை. இப்பகுதிகளில் எக்காரணம் கொண்டும் தலையிடமாட்டார். அவை பின்னர் பிரிட்டிஷாரால் ஆக்கிரமிக்கப்படும்.
அன்றிஅ வை பிரிட்டனோடு ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளன.

ஒப்பந்தம் ஏழு:
இவையன்றி பிரிட்டானிய அரசு இப்னு ஸவூதுடன் நல்லுறவு கொண்டுள்ளது. இன்னும் இரு சாராரின் நல்லுறவை மேலும் வம்பாலுப்படுத்திக் கொள்ளும்

வகையில் விரிவானதோர் ஒப்பந்தமும் செய்து கொள்ள அது ஒப்புதலும் அளித்துள்ளது.

கையொப்பம் கையொப்பம்

1915 நவம்பர் 26. அப்துல் அஜீஜுஸ் ஸவூத் B.ரீட்

இந்த ஒப்பந்தம் இந்திய வைஸ்ராய் கவர்மெண்ட் ஆப இண்டியாவின் மூலம் 1916, மே 18 ம் தேதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

## புனித பூமி ஹிஜாஸில் நஜ்திகளின் மோசடித் தனம்.

எந்த நஜ்திய ஆட்சியை இன்று புனித இஸ்லாமிய ஆட்சியெனக் கூறி இஸ்லாம் களங்கப்படபடுத்தப்படுக் கொண்டுள்ளதோ, அந்த நஜ்திய வஹாபிகள் ஹிஜாஸுடைய புனித மண்ணில் வாழ்ந்த மு.்.மின்களின் விலை மதிப்பற்ற இரத்தத்தின் மீது நடத்திய வெறியாட்டத்தை சரித்திரம் இன்றும் கதறிக் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இன்னும் இந்த வஹாபிகள் தொண்டைக்கிழிய குர்ஆன், சுன்னத் என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தாலும், அவர்களின் அராஜகமும், கொலை வெறியும், நம்பிக்கைத் துரோகமும், நம்ப வைத்து கழுத்தை அறுத்த அவர்களின் பேடித்தனமும் இஸ்லாமிய விரோதிகளுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பும், அவ்விரோதிகளுடன் இணைந்து சதி செய்து மார்க்கத்தை களங்கப்படுத்திய கூட்டுத் சதியும் இவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எள் முனையளவு கூட சம்பந்தமில்லை என்பது மட்டுமல்ல. மனிதத் தன்மை கூட அவர்களிடம் அறவே இல்லை என்பதை நமக்கு உறுதிப்படுத்துகின்றன.

1745லிருந்து 1925 வரை நடத்தப்பட்ட இந்த நஜ்திய நாய்களின் ரத்த வெறியின் திடுக்கிடத் தக்க வராற்றுச் சம்பவங்களை எல்லாம் இச்சிறு நூலில் விபரித்து விடுவதென்பது அத்தனை எளிதான காரியமில்லை. ஆதலால் இச்சிறு நூலில் 1925ம் வருடம் நஜ்திகளால் நடத்தப்பட்ட கொலை வெறியாட்டத்தின் சில சம்பவங்களை சரித்திரங்களின் பின்னணியைக் கொண்டு உங்களின் பார்வைக்குத் தருகிறேன். இதன் மூலம் அந்த ரத்த வெறி பிடித்த மிருகங்களின் முகத்தை மறைத்துக் கொண்டுள்ள திரையை நீக்கி அவர்களின் சுயரூபத்தை நீங்கள் பார்க்கலாம்.

## தாயிபில் நஜ்திகளின் அட்டூழியம்

கி.பி. 1925 ல் நஜ்திகள் புண்ணிய பூமியான மக்கா மதீனாவில் தமது கொலை வெறித் தாக்குதலைக் கொண்டு ஆரம்பித்தபோது அதில் அங்கிருந்த மு.்.மின்களின் விலை மதிப்பில்லாத ரத்தத்தால் தமது கைகளை கரைபடுத்திய நிகழ்ச்சியைப் போன்று சரித்திர ஏடுகளில ஈனத்தனமான வேறெந்த சம்பவத்தையும் நம்மால் நிச்சயம் காணமுடியாதென்றே சொல்ல வேண்டும்.

கி.பி. 1925 ஆகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு இத்திடுக்கிடத் தக்க சம்பவத்தின் செய்தி ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டரின் மூலமாக லண்டனிலிருந்து கிடைத்தது. அதாவது வஹாபிகள் மதீனாவை ஆக்கிரமித்துள்ளனர். அவர்கள் மஸ்ஜிதே நபவியின் ‘குப்பா’(எதில் நபிகளார் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்களோ) வுக்கு சேதம் விளைவித்துவிட்டனர். இன்னும் ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹுவின்

மஸ்ஜிதை இடித்தெறிந்து விட்டனர். இச்செய்தி இஸ்லாமிய உலகையே உலுக்கி விட்டது. நானா பக்கங்களிலிருந்தும் நஜ்திகள் மீது கண்டனக் குரல் எழுந்தன.ஃ. அப்போது கஃபாவிலிருந்த இருபதாயிரம் பேர் இதில் பல தேசத்தின் உலமாக்களும் ஷைகுமார்களும் இருந்தனர். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு தீர்மானமியற்றினர். அது...

டிசம்பர் 11 மக்காவாசிகள் இன்று கஃபாவின் முன் கூடியுள்ளனர். இதில்இருபதாயிரம் மக்காவாசிகளான முஸ்லிம்களும், ஜாவா, இந்தியா, சூடான், ஜஸாயிர், ரஷியாவைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து இஸ்லாமிய உலகுக்கு அறிவிக்கும் செய்தி யாதெனில்...

வஹ்ஹாபிகள் தாயிபின் மீது படையெடுத்து ஹாஷிமியாக்களுடன் போர் புரிந்தனர். ஹாஷிமியாக்களுக்கும் மக்காவாசிகளுக்குமிடையே ஓர் இணக்கமான நல்லுறவு இன்றுவரை இருந்து வருகிறது. இதில் அனைத்து வழிகளிலும் அங்குள்ள மக்களையும், மற்ற நாடுகளைச் சார்ந்தோர்களையும் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் கூட, வஹ்ஹாபிகள் அந்நல்லுறவுக்கு மாறாக தாயிபின் மீது படையெடுத்ததுடன், அங்குள்ள மக்களின் மீதும் வேற்று நாட்டவர் மீதும் தமது அராஜகத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

அத்துடன் அங்கிருந்த இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ரை இடித்ததோடு, அங்கே வசித்து வந்த குழந்தைகள், பெண்கள், வயோதிகள் மீதும் கொலைவெறித் தாக்குதலை நடத்தினர். இதில் வேற்று நாட்டவர் அனைவருமே கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

1925 டிசம்பர் 10. இக்கூட்டத்தில் பங்கு பற்றியோர்....

அப்துல் கப்பார் சூபி, அப்துஸ் ஸாகானி, இப்னு காரி அப்தில்லாஹ் மர்ருஹ் சூடானி, மூத்தாதி பத்ருத்தீன், ஹிதாயத்துல்லாஹ் அஜர்பைஜானி, மௌலானா கப்பார் பின் கரீனி, மௌலானா முஹம்மத் தாவூதி அம்ராகிஸ்தானி, அஹ்மத் பின் அனாதானி, அபுல் ஜவ்லாத்தி, முஹம்மத் அப்தில்லாஹ் பின் ஜைதானிஷ் ஷகீனி, முஹம்மத் ஹபீபுல்லாஹ் ஷௌகத்தீ, உமர் தூனிஸில் மராகஷி, முஹம்மத் முக்தார் ஆத்திஸத்தி, நாஜிமுத் தௌலா ஈ,ரானி, முஹம்மத் பின் அப்துல் கரீம், முஹம்மத் அத்தார் பின் சுலைமான், முஹம்மத் இஸ்மாயீல் பின் கல்பானி ஆகியோர்.

இக்கொடூரமான சம்பவத்தின் செய்தி இந்திய தேச முஸ்லிம்களுக்கு எட்டியபோது அவர்கள் தமது மன அமைதியை இழந்து தவித்தனர். அத்துடன் மக்கா மதீனா போன்ற புனித மண்ணின் மீது நேசம் கொண்டிருந்தவர்கள் இரத்தக் கண்ணீர் வடித்தனர்.

இதனால் லக்னோவைச் சேர்ந்த மௌலானா அப்துல் பாரி ரஹிமஹுல்லாஹ்வின் தலைமையில் 'ஜம்இய்யத்தே குத்தாமுல் ஹரமைன்' என்னும் பெயரில் ஒரு கமிட்டி உருவாயிற்று. கி.பி. 1925 டிசம்பர் மாதம் நிலைமையைத் தெரிந்து கொள்வதற்காக ஹிஜாஸை நோக்கி அக்கமிட்டி பயணமாயிற்று. அதில் சென்ற அவர்கள் சேகரித்து அனுப்பிய செய்திகள் நம்மை நிலைகுலையச் செய்து விடுவதாயிருந்தன.

## 'ஜம்இய்யத்தே குத்தாமுல் ஹரமைனின் ரிப்போர்ட்

இப்னு ஸவூத், ஹாபிஸ் வஹப் உட்பட கிட்டத்தட்ட அனைவரும் ஒப்புக் கொண்ட விஷயம் யாதெனில், தாயிபுக்குள்' நஜ்திகள் அபயமளிக்கிறோம் எனக் கூறித்தான் நுழைந்தனர். அதன்பின் நகரங்களை கொள்ளையடித்தனர். முஸ்லிம்களிடம் அல் லாஹ்வின் அபயம், இப்னு ஸவூதின் அபயம் எனக் கூறி அவர்களை அவர்களின் வீட்டு மாடிகளிலிருந்து கீழே இறங்க வைத்தனர். அந்த அப்பாவிகள் கதவைத் திறந்ததுதான் தாமதம்.அவர்கள் மீது துப்பாக்கிக் குண்டு மழையைப் பொழிந்தனர். இறந்துபோன பெண்களின் கணவன்மார்கள், பிள்ளைகள், சகோதரர்கள் போன்றோர்களின் சடலங்களை அப் பெண்களைவ ிட்டே வீட்டை விட்டு வெளியே தூக்கி வீச வைத்தனர்.

இதைச் செய்ய மறுத்தவர்களும் 'ஸல்லி அலா ரஸூல்' என்றும், '.'.கபா.'.பல்லாஹு வரஸூல்' என்று சொன்னவர்களும், கொல்லப்பட்டனர். அவர்கள் அடித்த கொள்ளையில் பெண்களின் ஆடைகள் முதற்கொண்டு உறியப்பட்டன. அவர்களின் மார்பகங்களையும், வெட்கஸ்தலங்களையும் தீண்டினர். அப்பெண்களின் மேனியில் பைஜாமாவையும் கமீஸையும் தவிர வேறொன்றும் இல்லை. பர்தாவிலிருந்த பெண்களின் ஆடைகள் உறியப்பட்டு சோதிக்கப்பட்டனர். பெண்களிடம் தகாத அடாவடித்தனம் புரிந்து அவர்களின் வெட்கஸ்தலங்களில் வாட்கள் சொருகப்பட்டு கொன்றொழிக்கப்பட்டனர்.

மறுநாள் மீதமிருந்த வயோதிகர்கள் அவர்களின் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டு ஒரு தோட்டத்தில் ஐந்து நாட்கள் வரை கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். மூன்று நாள்வரை உணவுகூட தராமல் வதைத்தனர். அவர்களின் கண் முன்னாலேயே அவர்களது குடும்பத்தார் மற்றும் பந்துக்களின் பிரேதங்களை கோவேறு கழுதைகளின் கால்களில் கட்டி இழுத்துச் சென்று குளிப்பாட்டாமலும் கபன் அணிவிக்காமலும் ஏன்! ஜனாஸா தொழுகை கூட நடத்தாமல் அவர்களைப் புதைத்தனர்.

அத்துடன் அவ்வயோதிகளர்களில் வசதி படைத்தவர்களிடம் போருக்குரிய செலவுத் தொகையையும் வசூலித்தனர். அதன்பின் அவர்களை மக்காவுக்கு எவ்வித வழிகாட்டியுமின்றி வெறுங்கால்களுடன் அனுப்பி வைத்தனர். பெண்களும், குழந்தைகளும், வயோதிகளர்களும் வழியில் மிகப்பெரும் துன்பத்திற்குள்ளாயினர். இந்த நஜ்திகள் முஸ்லிம்களது பொருட்களை கொள்ளையடித்தல் தங்களுக்கு கனீமத்தா(ஹலாலா)கக் கருதி அள்ளிச் சென்றனர். மற்றும் மிகுதமான இஸ்லாமியப் பெண்களை அடிமைகளாகவும் ஆக்கிக் கொண்டனர். ஆக இச்சம்பவத்தை நினைத்தாலே மயிர்களெல்லாம் குத்திட்டு நின்று விடுவதோடு துக்கம் தொண்டையை அடைக்கிறது.

கிலாபத் கமிட்டியின் மற்றோர் பிரிவும் இந்நஜ்திகளின் வெளியாட்டத்தை, ரத்தவெறி கொண்டு அவர்கள் நடத்திய போர் தாண்டவத்தை தெரிந்து கொள்வதற்காக ஹிஜாஸை நோக்கிப் புறப்பட்டது. அதில், மௌலானா சையித் முஹம்மத் சுலைமான் நத்வி, மௌலானா முஹம்மத் இர்பான், மௌலானா ஜ.'.பர் அலீகான்(எடிட்டர் ஜமீன்தார்), சையித் கர்ஷீத் ஹசன், மௌலானா அப்துல் மாஜித் பதாயூனீ, முஹம்மத் ஷுஐப் குறைஷி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

## கிலாபத் கமிட்டியின் ரிப்போர்ட்

மக்காவில் ஜன்னத்துல் முஅல்லாவின் கப்ரஸ்தானிலிருந்த கப்ருகளனைத்தும் தகர்க்கப்பட்டு விட்டன. அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரித்த அவர்களின் இல்லம் தரைமட்டமாக்கப்பட்டு விட்டது. எனினும் நஜ்திய ஆட்சியாளார்கள் மதீனாவிலுள்ள கப்ருகள் விசயத்தில் மக்காவில் நடைபெற்றது போன்று நடைபெறாது என்று உறுதியளித்துள்ளனர்.

நூல்: கிலாபத் கமிட்டி ரிப்போர்ட், பக்கம் 23.

### சவூதிப்படை ஷைகு மற்றும் உலமாக்களை கொன்றொழித்தல்

தாயிபில் இந்நஜ்திகள் நடத்திய கொலைவெறித் தாண்டவம் குறித்து அல்லாமா சையத் இப்றாஹீமுர்ராவி ரிபாயி அவர்கள் கூறுகின்றனர், நஜ்திகள் தாயிபைக் கைப்பற்றிய பின் அவர்கள் நடத்திய மிகப்பெரும் தாக்குதல் அங்கிருந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை கொன்று குவித்ததுதான். இக்கொலை வெறி அராஜகத்தைக் கேள்வியுற்று இஸ்லாமிய உலகம் முழுவதுமே பொங்கியெழுந்தது.

அந்த வெறியர்களால் கொல்லப்பட்டவர்களில் அதிகமான உலமாக்களும் இருந்தனர். உதாரணமாக சையித் அப்தில்லாஹிஜ் ஜவாதி முப்தி ஷாபி மக்கா, ஷைகு அப்துல்லாஹ் அபுல் கைர் காஜி மக்கா, ஷைகு சுலைமான் முராத் காஜி தாயிப், சையித் யூசுபுஜ் ஜவாதீ (கிட்டதட்ட எண்பது வயது முதியவர்) ஷைகு ஹசனுஷ் ஷைபீ, ஜபருஷ் ஷைபீ போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களுக்கு அபயமளிப்பதற்குப் பதிலாக இவர்களின் வீட்டு வாயில்களிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர். நூல்: கும்பதே கிழ்ரா பக்கம் 40.

### மக்காவின் புனிதம் சிதைக்கப்படல்

மக்காவின் புனித பூமி இஸ்லாமிய உலகின் நம்பிக்கைக்குரிய மர்கஸாகும். இன்னும் அப்புனித ஸ்தலத்தை கண்ணியப்படுத்துதல் முஸ்லிம்களின் கட்டாயக் கடமையும் கூட. கி.பி. 1925 ல் இப்புனித மண்ணில் நடைபெற்ற அநியாயமும் கொலைவெறித் தாக்குதலும் எதேச்சையாக நிகழ்ந்துவிட்ட ஒன்றல்ல. மாறாக சவூதி வம்சத்தினரின் முன்னோர்கள் பல காலமாகவே இவ்வெறியாட்டத்தை பிரிட்டிஷாரின் துணையுடன் நடத்தி வந்துள்ளனர் என்பது வரலாறு கூறும் உண்மைகளாகும்.

சவூத் இப்னு அப்துல் அஜீஸின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஷைத்தானியத்தான அக்கோர தாண்டவத்தை நமது கண்கள் முன் கொண்டு வந்து படம் பிடித்துக் காட்டும் ஜனாப் சர்தார் முஹம்மத் ஹசனீ பி.ஏ. இவ்வாறு கூறுகிறார்…

ஸவூத் இப்போது உலக மக்களின் பார்வையில் மகி மிகக் கேவலமடைந்து போயிருந்தார். இந்நிலையில் அவர் ஹிஜாஸை நோக்கிப் படையெடுத்து புறப்பட்டபோது, வழியில் தாயிபை கைப்பற்றிஅ ங்கிருந்து நானா பக்கங்களுக்கும் படைகளை அனுப்பத் துவங்கினார். அப்போது மக்காவுடைய ஷரீபிடம் போதிய படைபலமும் இருக்கவில்லை. எதிர்க்க சக்தியின்றி ஷரீப் மக்காவை விட்டுவிட்டு ஜித்தாவுக்குப் போய்விட்டார்.

கி.பி. 1803ல் சவூத் எவ்வித எதிர்ப்புமின்றி மக்காவிற்குள் நுழைந்து விட்டார். இதில் வஹ்ஹாபிகள் வெகுகாலமாகவே மக்காவை குறி வைத்திருந்தனர். அத்துடன்

இஸ்லாத்திற்கெதிரான குப்ரையும், ஷிர்க்கையும் முழுமையாக நீக்கும் காரியத்தை அவர்கள் மக்காவிலிருந்துதான் துவங்க வேண்டும் என சபதம் எடுத்திருந்தனர். இப்போது மக்கா அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டதால் அங்கிருந்த நல்லோர்களின் கப்ருகளையெல்லாம் உடைத்தெறிந்து முஸ்லிம்களின் ஜியாரத்திற்குரிய புனித ஸ்தலங்களையும் சிறுமைபடுத்தினர். க.்.பாவின் திரையை கிழித்தெறிந்தனர். –நூல்: ஸவானிஹே ஹயாத் கல்தான் அப்துல் அஜீஸ், ஆலெ சவூத் பக்கம் 48

**மக்காவின் மக்பறாக்கள் மஸ்ஜிதுகள் சிதைக்கப்படல்.**

கி.பி. 1925 ல் சவூதி படைகள் நபித்தோழர்களின் கப்ருகளையும் குப்பாக்களையும் சிறிதும் இறைவனது அச்சமில்லாது எவ்வாறெல்லாம் சிதைத்தெறிந்தனர் என்பதை நமக்கு விபரித்துக் காட்டும் சர்தார் ஹு"சைனி அடுத்துக் கூறுகின்றார்…

மக்காவாசிகளுக்கு நஜ்திகள் அபயமளிப்பதாக அறிக்கை விடுத்தனர். இதன்பின் சுல்தான் இப்னு ஸஜ்ஜாத் ஷைகு கத்பத் தற்காலிகமாக நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். 'அபயம்' என்னும் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரும் மக்கள் சிதறிக் கிடந்தனர். இந்நிலையில் மக்காவை கைப்பற்றிய நஜ்திகள்…

மக்காவின் முஷ்ரிக்குகள் (அதாவது மக்காவிலிருந்த முஸ்லிம்கள் நஜ்திகளின் கொள்கைப்படியும் அக் கொள்கையை அவர்கள் ஏற்க மறுத்தாலும் முஷ்ரிக்குகள் என்று அழைக்கப்பட்டனர்) தப்பிவிட்டாலும் அங்குள்ள கப்ருகளை கண்டிப்பாக இடித்தே தீர வேண்டும். இன்னும் மஸ்ஜிதுகளும் தரைமட்டமாக்கப்பட வேண்டும். காரணம் நஜ்திகளின் கொள்கைப்படி இவையனைத்தும் ஷிர்க்கை தூண்டும் சாதனங்களாக கருதப்பட்டன.

ஆகையால் இப்புனித பூமியிலிருந்த ஆயிரக்கணக்கான வருடங்களை கடந்துவிட்ட ஜியாரத்திற்குரிய புண்ணிய ஸ்தலங்கள் அனைத்தையும் கண்மூடித் திறப்பதற்குள் தகர்த்தெறிந்தனர். இன்னும் எல்லா 'இஸ்லாமியச் சின்னங்களையும்' வஹாபிகளின் கொள்கைப்படி குர்ஆன் மற்றும் ஹதீஸில் இதற்குரிய ஆதாரமில்லை எனக் கூறி சிதைத்தெறிந்தனர். இச்செயல் இஸ்லாமிய உலகையே உலுக்கிற்று. ஈரான் மற்றும் இந்திய தேச முஸ்லிம்கள் கொந்தளித்துப் போயினர். மக்கள் முன்பே வஹாபிகளை சந்தேகத்துடன் பார்த்து வந்தது போய் அவர்களின் இக்கொடுஞ்செயல் வஹாபிகள் இஸ்லாமிய விரோதிகள்தான் என்பதை உறுதிப்படுத்திற்று. ஆனால் நஜ்திகள் அதற்கெல்லாம் கொஞ்சமும் பயப்படுகிறவர்களாக இல்லை. அவர்கள் நினைத்ததை முடிவில் செய்து முடித்தனர்.

நூல்: ஹயாத் கல்தான் இப்னு ஸவூத் பக்கம் 155.

நஜ்திகளுக்கு மௌலானா ஷவ்கத் அலியின் தந்தி:

நபித்தோழர்களின் கப்ருகள் அவமதிக்கப்படும் செய்தி கேட்டு முஸ்லிம்கள் கொதித்துப் போய் உள்ளனர். தயை செய்து உண்மை நிலையை தெரிவிக் வேண்டுகிறேன். -ஷவ்கத் அலி.

நஜ்து சுல்தானின் பதில்:

இஸ்லாமியரின் கப்ருகள்' நம்மிடம் மதிப்பிற்குரியவை. முஸ்லிம்களின் கப்ருகள் அதிலும் நபித்தோழர்களின் புனித கப்ருகள் நமது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியவைகளாகும். நீங்கள் அமைதியாக இருங்கள். நமது படைகள் புனிதமான மக்களுக்கு எதிராக எதையும் செய்யாது.

அப்துல் அஜீஸ் சுல்தான் நஜ்த்,

நூல்: மௌலானா முஹம்மத் அலீ ஜவ்ஹர், பக்கம் 28.

**மதீனாவின் புனிதத்தின் மீது ரத்தம்**

தாயிபில் கொலை வெறித் தாண்டவத்தை நடத்தி அங்கிருந்த உலமாக்கள், ஷைகுமார்கள், பெண்கள், குழந்தைகளை ஈவிரக்கமின்றி கொன்று குவித்ததின் மூலம் உலகின் நானா பக்கமும் இருந்த முஸ்லிம்கள் நஜ்திகளை லஃனத்துச் செய்தனர். தங்களுக்கு எதிரான ஓர் அலை உலகின் எல்லாப் பாகங்களிலும் வீசத் துவங்கியதைக் கண்ட சவூதி ஆட்சி தந்திகள், அறிக்கைகள் மூலம் உலக முஸ்லிம்களை அமைதிப்படுத்தும் வகையில்...

மதீனாவிலுள்ள இஸ்லாமிய சின்னங்கள், மக்பறாக்கள், ஜியாரத்திற்குரிய ஸ்தலங்கள், கப்ருகள், குப்பாக்கள், மஸ்ஜிதுகள் போன்றவை நிச்சயம் பாதுகாக்கப்படும். அவைகளுக்கு எவ்விதச் சேதமும் விளைவிக்கப்பட மாட்டாது என வாக்களித்தது.

ஆனால் நடைபெற்றது என்ன தெரியுமா? இந்த நஜ்திய நாய்கள் எதைஎதை பாதுகாப்போமென வாக்குத் தந்தனரோ, அவையனைத்தையும் மண்ணோடு மண்ணாக்கினர்.ஆஹ்! அப்புண்ணிய பூமி. அங்கே குரலை உயர்த்துவது கூட முஸ்லிம்களின் நல்லமலை அழித்துவிடும் என்றல்லவா குர்ஆன் எச்சரிக்கின்றது. நபிகளாரின் புனித ரௌழா. உலகிலுள்ள கோடிக்கணக்கான ஈமானுக்குரிய மர்க்கஸ். மஸ்ஜிதுன் நபவி. அண்ணலாரின் புனித மேனியுடன் தொடர்பு கொண்டு இணைந்துள்ள பூமி. அதனை உலமாக்களும் முஹத்திஸீன்களும் அர்ஷைவிட உன்னதமான ஸ்தலமென்றல்லவா கூறிக் கொண்டுள்ளனர்.

மதீனா! இங்குதான் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் நமது அண்ணலார் தமது புனித திரேகத்துடன் உலவி வந்தனர். அம்மண்ணிலுள்ள ஒரு தூசி கூட விசுவாசிகளுக்கு கண்ணியத்திற்குரிய ஒன்றாக அல்லவா இருக்கின்றது. இப்புனித மண்ணில் நஜ்திய ஷைத்தான்கள் நடத்திய அக்கொடுஞ் செயலை நீங்களும் தான் பாருங்களேன். கி.பி. 1803ல் நடைபெற்ற நெஞ்சை உலுக்கும் அச்சம்பவத்தை மீர்ஜா ஹைராத் தெஹ்லவி என்பார் தமது நூலில் இவ்வாறு எழுதுகிறார்...

கி.பி. 1803 ம் ஆண்டின் இறுதியில் மதீனாவும் சவூத் பின் அப்துல் அஜீஸின் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து சேர்ந்த போது, அவர் தமது வஹாபியக் கொள்கையை எத்தனை தீவிரமாக நடைமுறைப்படுத்தத் துவங்கினார் எனில், அங்கிருந்த கப்ருகளையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கியதோடு, அண்ணல் நபிகளாரின் புனித ரவ்ழாவையும் கூட அவர் விட்டு வைக்கவில்லை. ரவ்ழா ஷரீபின் மேற் கூரையை தகர்த்ததுடன், நபிகளாரின் புனித மிகு கப்ருஷரீபின் மீது போர்த்தப்பட்டிருந்த போர்வையையும் எடுத்தெறிந்து விட்டார்.

-நூல்: ஹயாத்தே தையிபா, பக்கம் 305.

இதுபோன்றே சையித் முஹம்மத் ரஷீத் ரஜா அல்'மனார் என்னும் பத்திரிக்கை ஆசிரியர் தமது நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்…

சவூத் பின் அப்துல அஜீஸ் ஹிஜ்ரி 13ம் நூற்றாண்டில் மக்கா மதீனாவை கைப்பற்றிய பின் நபிகளாரின் ரவ்ழாவிலிருந்த குப்பாவுக்கு மேலே வைக்கப்பட்டிருந்த தங்கக் கலசத்தை எடுத்துக் கொண்டார். அதன்பின் சவூதிபடை ரவ்ழா ஷரீபின் குப்பாவை இடிக்க எண்ணி அதன்மீது ஏறியபோது அதில் இருவர் கீழே விழுந்து இறந்ததைக் கண்டதும் குப்பாவை இடிக்கும் எண்ணத்தை கைவிட்டு விட்டனர்.

இதுபோன்றே கி.பி. 1925ல் சவூதி ஆட்சியாளர்கள் தமது தந்திரமான வஞ்சகத்தின் மூலம் ஒரு பக்கம் உலக முஸ்லிம்களை அமைதிப்படுத்திக் கொண்டே மறுபக்கம் அங்கிருந்த இஸ்லாமிய சின்னங்களையும், கப்ருகளையும், அதன்மீது கட்டப்பட்டிருந்த குப்பாக்களையும், மஸ்ஜிதுகளையும் இடித்துத் தரைமட்டமாக்கியதோடு, அவர்களின் வெறி அடங்காமல் இறுதியில் நபியின் ரவ்ழா ஷரீபின் மீது கட்டப்பட்டிருந்த குப்பாவையும் துப்பாக்கியால் சுட்டனர். இச்செய்தி உலக முஸ்லிம்களது செவிப்பறையை வந்து மோதிய போது உலக முஸ்லிம்களின் உள்ளமெல்லாம் கொதித்துப் போய் விட்டன. இதுபற்றிய உண்மையை அறிய சிலரை ஹிஜாஸை நோக்கிஅ னுப்புவதென முடிவெடுத்தனர்.

-நூல்: நஜ்தோ ஹிஜாஸ், பக்கம் 112, 113.

### ஈரானியப் பார்வையாளர்களின் அறிக்கை

இஸ்லாமியச் சின்னங்கள், புனிதமிகு கப்ருகள் மற்றும் மஸ்ஜிதுகள் அனைத்தும் அவமதிக்கப்பட்டதோடு சிதைத்தும் சின்னாபின்னமும் படுத்தப்பட்டன. எதுவரையெனில் அண்ணல் நபிகளாரின் புனிதமிகு ரௌலாஷரீபில் ஐந்து துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்தன. கி.பி.1925 ம் ஆண்டின் இறுதியில் நாங்கள் நேரில் சென்று இதனை கண்ணுற்ற போது எங்களின் நெஞ்சம் வேதனையால் வெடித்துச் சிதறி போயிற்று.

ஈரானிய பார்வையாளர்கள் இப்னு சவூதை சந்தித்து இக்கொடுஞ் செயல் பற்றி வினவியபோது ஈரான் அரசருக்கு எழுதிய கடிதத்தில் மக்காவில் இடிக்கப்பட்டு விட்ட இஸ்லாமியச் சின்னங்களையும், கப்ருகளையும் ஈரான் திரும்ப எடுத்துக் காட்ட முயன்றால் அதனை நாம் தடுக்க மாட்டோம் என்று இப்னு சவூதின் கடிதம் கூறிற்று. –நூல்: மகாரிஷாத் முஹம்மத் அலீ பக்கம் 67.

மோசடித்தனத்துக்கும் எல்லை கடந்த பித்தலாட்டத்:துகக்கும் உதாரணகர்த்தா ஒருவர் உண்டு என்று சொன்னால் அது வஹாபிகளான நஜ்தின் இப்னு சவூதைத் தான் சுட்டிக் காட்ட வேண்டும். ஏனெனில் ஒரு பக்கம் உலக இஸ்லாமிய நாடுகளுக்கும் முஸ்லிம்களுக்கும் கடித மூலமும், தந்திகள் மூலமும் இஸ்லாமியச் சின்னங்களையும், நபித்தோழர்கள், நபிகளாரின் குடும்பத்ததாரது புனிதமான கப்ருகளையும் அவைகள் மீது கட்டப்பட்டுள்ள குப்பாக்களையும் இடிக்க மாட்டோனமென்று சொல்லிக் கொண்டே மறுபக்கம் தங்களின் வஹாபியக் கொள்கையை நிலைநாட்டவும், பிரிட்டிஷாரை சந்தோசப் படுத்தவும் இடித்துக் கொண்டிருந்தனர் எனில், இதுதான் இவர்கள் கிதாபையும் சுன்னத்தையும் பின்பற்றுகின்ற லட்சணம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகமக்களின் இந்த மதிப்பில்லாத மகத்துவமிக்க நினைவுத் சின்னங்கள் இறைவனின் வல்லமைக்குரிய எடுத்துக் காட்டாகவும், இஸ்லாமிய வரலாற்றின் தூண்களாகவும் திகழ்ந்து கொண்டிருந்தவை. இந்த வஹ்ஹாபிய ஷைத்தான்கள் உலக முஸ்லிம்களின் ஈமானைப் பற்றி கொஞ்சங்கூட யோசிக்காது முஸ்லிம்களது இஸ்லாமிய உணர்வை தமது காலுக்கு கீழே போட்டு மிதித்தனர். அதனால் இன்றும் இஸ்லாமிய மக்கள் இவர்களை ல.்.னத்துச் செய்து கொண்டுள்ளனர்.

கி.பி. 1926 ல் இந்திய தேசத்திலிருந்து கிலாபத் கமிட்டியை சேர்ந்தவர்கள் மீண்டும் இரண்டாவது முறையாக ஹிஜாஸை நோக்கி உண்மை நிலையினை அறிந்துவர பயணமாயினர். அவர்கள் அங்கு சென்று பார்வையிட்டபின் தந்த ரிப்போர்ட்டைப் பாருங்கள்.

மே 22 ம் நாள் அக்பரீ என்னும் கப்பல் மூலம் பயணமானோம். அப்போது முதன் முதலாக நெஞ்சைப் பிளக்கச் செய்யும் ஒரு செய்தி வந்து சேர்ந்தது. அது மதீனாவிலுள்ள ஜன்னதுல் பகீயில் உள்ள கப்ருகளும் அதனைச் சுற்றியுள்ள கப்ருகளும் தகர்த்தெறியப்பட்டுவிட்டன என்பதே. எனினும் அதனை நாங்கள் அங்கீகரிக்கத் தயங்கினோம். காரணம் இப்னு சவூத் கிலாபத் கமிட்டிக்கு எழுத்துப் மூலம் மதீனாவிலுள்ள நினைவுச் சின்னங்களையும் கப்ருகளையும் ஒன்றும் செய்ய மாட்டோமென வாக்குத் தந்திருந்தார்.

ஆனால் ஜித்தா போய் சேர்ந்தபோது சவூதிய ஆட்சியின் அதிகாரிகளில் ஒருவரான ஷெய்கு அப்துல் அஜீஸ் அதீக் என்பவரிடம் நாங்கள் கேள்விப்பட்டதை கூறவும், அது உண்மைதான் என அவர் ஆமோதித்ததோடு, நஜ்திய ஆட்சி குப்ரையும், பித்அத்தையும் ஒழிப்பதை தனது கடமையாகக் கருதுகின்றது. ஆதலால் அதை செயல்படுத்தும் விஷயத்தில் உலகிலுள்ள மற்ற இஸ்லாமிய நாடுகளைப் பற்றிஅ து கவலைப் படாது. இதனால் முஸ்லிம்கள் சந்தோஷப்பட்டாலும் சரி. அல்லது வெறுப்புற்றாலும் சரியே என்று கூறினார். –நூல்: ரிப்போர்ட் கிலாபத் கமிட்டி, பக்கம் 85.

அதன்பின் அவர் எழுதுகிறார்…

ஆக சம்பவங்களும் சூழ்நிலைளும் எப்படியாயினும் சரி. சுல்தான் அப்துல் அஜீஸின் வாக்குப் பிரமாணத்திற்குப் பின்னரும் கூட மதீனாவிலிருந்த எல்லா குப்பாக்களுமே தகர்த்தெறியப்பட்டு விட்டன. நூல்: ரிப்போர்ட் கிலாபத் கமிட்டி , பக்கம் 88.

ஷிர்க், பித்அத் என்னும் அபாண்டமான பொய்யான காரணங்களைக் கூறி அஹ்’லெ பைத்துக்களின் புனிதமிகு கப்ருகளையும், நபித்தோழர்களின் கப்ருகளையும் அவற்றின் மீது கட்டப்பட்டிருந்த குப்பாக்களையும், இஸ்லாத்தின் புனிதமிகு சின்னங்களையும் சிதைத்தெறிந்த இந்த நஜ்திய வஹாபிகளான (சவூதி வம்சம், முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபின் வம்சம்) முஸ்லிம்கள் தம்மிறைவனை வழுத்திப் போற்றி வணங்கும் மஸ்ஜிதுகளை எதற்காக இடித்தனர்? இதற்கும் ஷிர்க், பித்அத் தான் காரணமா? என்பதை வாசிப்போர் யோசிக்க வேண்டும்.

மதீனாவில் மட்டும் இடிக்கப்பட்ட மஸ்ஜிதுகளைப் பாருங்கள். 1. மஸ்ஜிதே பாத்திமா மஸ்ஜிதே குபாவுடன் இணைந்தது. 2. மஸ்ஜிதே ஸனாயா. இது உஹத் மைதானத்தில் நபிகளாரின் புனித பல் ஷஹீதான இடத்தில் கட்டப்பட்டிருந்தது.

3.மஸ்ஜிதே மினாரத்தைன். 4. மஸ்ஜிதே மாயிதா. இது திருக்குர்ஆனிலுள்ள சூறா மாயிதா இறங்கிய இடத்தில் கட்டப்பட்டிருந்தது. 5. மஸ்ஜிதே இஜாபா. இந்த இடத்தில் நபிகளாரின் ஒரு குறிப்பிட்ட துஆ கபூலாயிற்று.

**கப்ருகள் சிதைக்கப்படல்**

**நபிகளாரின் இல்லப் பெண்மக்கள்**:

1. ஹஜ்ரத் பாத்திமா. 2. ஹஜ்ரத் ஜைனப். 3. ஹஜ்ரத் உம்மு குல்தூம். 4. ஹஜ்ரத் ருகையா. 5. ஹஜ்ரத் பாத்திமா ஸு.்.க்றா ரலியல்லாஹு அன்ஹும்.

**நபிகளாரின் பரிசுத்த துணைவியர்கள்**:

1. உம்முல் மு.்.மினீன் ஹஜ்ரத் ஆயிஷா. 2. உம்முல் மு.்.மினீன் ஹஜ்ரத் ஜைனப் 3. உம்முல் மு.்.மினீன் ஹஜ்ரத் ஹப்ஸா ரலியல்லாஹு அன்ஹும்.

**அஹ்லெ பைத்தின் பிரபலமானவர்களின் கப்ருகள்:**

1. நபிப்பேரர் இமாம் ஹஸன். 2. நபிப்பேரர் கர்பலாவில் ஷஹீதான இமாம் ஹுஸைனின் புனிதமிகு சிரம். 3. சையிதினா இமாம் ஜைனுல் ஆபிதீன். 4. நபிகளாரின் மைந்தர் செய்யிதினா இப்றாஹீம். 5. ஹஜ்ரத் அப்பாஸ். 6. இமாம் ஜ.்.பர் ஸாதிக் 7. இமாம் முஹம்மத் பாகிர் ரலியல்லாஹு அன்ஹும்.

**பிரபலமான ஸஹாபாக்கள், தாபியீன்களின் கப்ருகள்:**

1. அமீருல் மு.்.மினீன் ஹஜ்ரத் உஸ்மான். 2. சையிதினா உஸ்மான் பின் மழ்வூன். 3. ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்.்.ப். 4. ஹஜ்ரத் ஸ.்.த் பின் அபீ வக்காஸ். 5. ஹஜ்ரத் இமாம் மாலிக். 6. ஹஜ்ரத் இமாம் நாபி.். ரலியல்லாஹு அன்ஹும்.

கிட்டத்தட்ட பதிமூன்று நூற்றாண்டுகளாக உலக முஸ்லிம்கள் தமதுகண்ணைப் போன்று பாதுகாத்து போற்றி வந்த மன அமைதியிழந்து தவிக்கும் போதெல்லாம் அந்த நல்லோர்'களின் அப்புனித மக்களின் கப்ருக்குச் சென்று தங்களுக்கு மன அமைதி வேண்டி நின்ற உலக முஸ்லிம்களின் உயிருக்குயிரான அண்ணல் நபிகளாரின் குடும்பத்தினரது கப்ருகளை ஈவிரக்கமின்றி எவனோ அள்ளி வீசிய பணத்துக்காக அந்நன் மக்களின் புனித கப்ருகளை இடித்தெறிந்து அதனை நடைபாதையாக்கி ரோடு போட்டு இன்று மக்காவுக்கு செல்லும் ஹாஜிகளை அம்மக்களின் கப்ருக்கு மேல் நடந்து செல்ல வைத்த துர்பாக்கிய நிலையினை உருவாக்கிய அக்கல் நெஞ்சக் காரர்களான நஜ்திகள் (வஹ்ஹாபிகள்) சவூதிய வம்சமும் முஹம்மத் பின் அப்துல் வஹாபின் வம்சமும் தான் இன்று சத்திய இஸ்லாத்தை அதன் தூய்மை கெடாது காத்து வருகின்றதென எத்தனை அபாண்டமான பொய்யைக் கூறி அவர்கள் வீசி எறிந்ததை தமது வாயால் கவ்விக் கொண்டுள்ள இந்திய வஹாபிப் பிரிவினை வாதிகள் கூறிவருகின்றனர் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

இங்கு வாசகர்களாகிய நீங்கள் உங்கள் நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள். உங்களின் குடும்பத்தாரது கப்ருகளை எவரேனும் இடித்தெறிந்தால் நீங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டா இருப்பீர்கள்? உங்களின் இரத்தம் கொதிக்காதா? கொதிக்குமெனில், பின் நஜ்திய மிருகங்கள் இருலோக வேந்தரான உங்களின்

ரஸுலின் குழந்தைகள் மீதும், அவர்களின் மனைவிமார்கள் மீதும், அவர்களின் தோழர் பெருமக்கள் மீதும், அவர்களின் புனித திரேகத்தின் மீதும் புல்டோசர்களை விட்டு ஓட்டினார்களே! அந்த நன்மக்களின் மகத்'துவத்தை மண்ணோடு மண்ணாக்கினார்களே! என்ன? உங்களின் வாழ்க்கையின் எந்த நிலையிலாவது அவர்களை நீங்கள் மன்னிப்பீர்களா?

பதில் தாருங்கள்! பதினைந்து நூற்றாண்டுகள் கடந்த பின்பும் கூடி நபிப்பேரர் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுவை ஷஹீதாக்கிய யஜீதை நீங்கள் மன்னிக்கவில்லையெனில், அதே ரஸுலுல்லாஹ்வின் இல்லத்தாரது கப்ருகள் மீது தங்களின் செருப்புக் கால்களை வைத்து மிதித்த நஜ்திய வஹ்ஹாபிகளான இப்னு ஸவூதுடைய வம்சத்தையும், முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்புடைய வம்சத்தையும் உங்களால் எப்படி மன்னிக்க முடிந்தது? அந்த நன்றி கெட்டோரை நல்லவர்களென உங்களால் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடிந்தது?

இந்த இடத்தில் நஜ்திகளான இவ்வஹ்ஹாபிகள் உண்மையிலேயே இஸ்லாமிய மார்க்கத்தின் புனிதத்தை காப்பதற்காகத்தான், இஸ்லாத்தில் ஊடுருவிவிட்ட ஷிர்க்கையும், பித்அத்தையும் ஒழிப்பதற்காகத்தான் நபிகளாரின் புனித ரவ்லாவை இடிக்க முற்பட்டார்களா? நபிகளாரின் பிள்ளைகளது கப்ருகளையும், உம்மஹாத்துல் மு.்.மினீன்களின் கப்ருகளையும், நபிப்பேரர்களின் கப்ருகளையும், நபித்தோழர்களின் கப்ருகளையும், தாபியீன்களின் கப்ருகளையும் இடித்தார்களா? அல்லது வேறு ஏதேனும் நோக்கம் இந்த வஹ்ஹாபிகளுக்கு இருந்ததா? என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள மீண்டும் முதல் பாகத்திலிருந்து குறிப்புக்களை உங்களின் பார்வைக்குத் தருகிறேன்.

> 'இதற்காக தமது கூலியாட்களில் ஒருவரான முஹம்மத் பின் ஸவூதை (சவூதிய வம்சத்தின் முன்னோடி) முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்புடன் இணைந்து ஒரு செயல் திட்டம் வகுக்கப்பட்டது. அந்த திட்டத்தை செயல் வடிவமாக்கிட ரகசியமாக ஒரு தூதர் பிரிட்டனிலிருந்து அனுப்பப் பட்டார். அவர் ஷைகி (முஹம்மத் பின் அப்துல வஹாபி)டம் பிரிட்டானிய அரசின் நோக்கங்களை விளக்கிக் கூற இரு முஹம்மதும் இணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.'
> -நூல்: ஹம்.்.ப்ரேயின் ரகசிய ரிப்போர்ட் பக்கம் 73.

இதில் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்பும், முஹம்மத் பின் சவூதும் இணைந்து செயலாற்ற வேண்டிய திட்டமென்ன? அதையும் பிரிட்டிஷ் உளவாளி ஹம்.்.ப்ரே இவ்வாறு கூறுகிறார்....

> நமக்கு மிகப் பெரும் கஷ்டமான காரியம் நல்லோர்களின் கப்ருகளை முஸ்லிம்கள் சென்று ஜியாரத்:து செய்வதாகும். இதற்காக நாம் பல்வேறு ஆதாரங்களை காட்டி முஸ்லிம்களிடம் கப்ருகளுக்கு முன்னுரிமை தருவதும், அங்கே செல்வதும் பித்அத்தும், ஷரீஅத்திற்கு மாற்றமான ஒன்று எனவும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் இறந்தோரை வணங்குவதும் மற்றும் இதுபோன்ற காரியங்களும் வழக்கத்தில் இல்லாதிருந்தது என்றும் கூறி சிறிது சிறிதாக அக்கப்ருகளனைத்தையும் தகர்த்தெறிந்து அவர்களை ஜியாத்து செய்வதை விட்டும் தடுக்க வேண்டும்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் தம் குடும்பத்தினர் மற்றும் அனைத்து நல்லோர்களும் இழிவுப்படுத்தப் படுகின்றனர் என்று காரணங் கூறியும், இதுபோன்றே ஷிர்க், சிலைவணக்கம் போன்றவற்றை அழித்தொழிக்கிறோம் என்றும் கூறி மக்கா, மதீனா மற்றுமுள்ள நகரங்களிலுள்ள முஸ்லிம்களது ஜியாரத்திற்குரிய ஸ்தலங்களையும் மற்றும் கப்ருகளையும் முடிந்தவரை தகர்த்தெறிய வேண்டும்.
-நூல்: ஹம்.்.ப்ரேயின் ரகசிய ரிப்போர்ட் ப்கம் 57, 69.

மேற்கண்ட ஆதாரத்தை மீண்டும் மீண்டும் வாசித்துப் பாருங்கள். இந்த சவூதியின் வெறிகொண்ட ஓநாய்கள் அஹ்லெ பைத்துக்களின், நபித்தோழர்களின் புனிதமிகு கப்ருகளையெல்லாம் இஸ்லாத்தின் புனிதத்தை காப்பதற்காகவோ, ஷிர்க்கையும் பித்அத்தையும் ஒழிப்பதற்காகவோ இடிக்கவில்லை. மாறாக முஸ்லிம்களின் விரோதியான பிரிட்டிஷ் அரசின் எலும்புத் துண்டுக்காகத்தான் இடித்தெறிந்தனர்.

அன்றி கப்ருகள் ஷிர்க்கையும் பித்அத்தையும் தூண்டக்கூடிய சாதனங்களாக இருந்தனவென்று சொல்லப்பட்டால், நபித்தோழர்கள் கப்ருகளை எதற்காக எடுத்துக் கட்டினர்? ஏன்! நபிகள் நாதரே உதுமான் பின் மழ்வூன் என்னும் தோழரது கப்ரின் தலைப்பகுதியில் கல்லை ஊன்றி அக்கப்ருக்கு ஏன் அடையாளமிட்டனர்?

அத்துடன் கப்ருகளை பின்னால் வரும் சமூக மக்கள் வணங்கத் தலைப்பட்டு விடுவார்கள் என்றிருந்தால் நபிகளார் இறந்து போனவர்களை எதற்காக புதைக்கச் சொல்ல வேண்டும்? எரிக்கச் சொல்லியிருக்கலாம் அல்லவா? ஆக இந்த சவூதிய வஹாபிகள் இஸ்லாமிய விரோதிகளின் கையாட்களாக மாறி பிரிட்டிஷின் படைவீரர்களுக்கு அரபி வேஷம் போடவைத்து அவர்களின் துணையோடுதான் மக்கா, மதீனா, தாயிப், நஜப், கர்பலா போன்ற பகுதிகளிலிருந்த நல்லோர்களின் கப்ருகளை இடித்து, இஸ்லாமிய சின்னங்களை எல்லாம் அழித்து, உலக முஸ்லிம்களின் உள்ளங்களில் உதிரம் கசியச் செய்தனர். இதைப்பற்றி பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் ஷோரஷ் காஷ்மீரி கி.பி. 1926 ல் ஹிஜாஸுக்கு சென்று தாம் பார்த்ததை இவ்வாறு நமக்கு சொல்லிக் காண்பிக்கிறார்…

**ஒன்று:**

ஜன்னத்துல் பகீ. நபிகளாரின் குடும்பத்தார் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள ஸ்தலம். இஸ்லாத்தின் துவக்க காலங்களில் இஸ்லாத்திற்காக தன்னுயிரை நீத்த ஷுஹதாக்களும், ஸாலிஹீன்களும், மார்க்கத் தலைவர்களும் இந்த மண்ணில்தான் குடிகொண்டிருந்தனர். இது எந்த அளவுக்கு சிதைக்கப்பட்டிருந்ததெனில் பார்த்ததும் ரத்தமெல்லாம் கொதித்துப் போனது.

**இரண்டு:**

அந்த ஷுஹதாக்கள். அவர்களை நபிகளார் தமது புனிதக் கரத்தாலேயே நல்லடக்கம் செய்திருந்தனர். அவர்களின் கப்ருகள் இன்று நாங்கள்தான் சுன்னத்திற்குரிய உண்மையான வாரிசுகள் எனப்படுவோரால் மண்ணோடு மண்ணாக்கப்பட்டிருந்தன. வரலாற்றின் அப்புனித சின்னங்களெல்லாம் மறைந்து கொண்டே வருகின்றன. எதனை அபூஜஹ்லாலும், உத்பாவாலும் அழிக்க

இயலவில்லையோ அவற்றை நாம் நமது கையிலிருந்து நழுவ விட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஒரு கணம் நான் துடித்துப் போய்விட்டேன். இது குர்ஆன் சுன்னத்தல்ல. மாறாக இறுகிப் போன இதயங் கொண்டோரின் வன் செயலாகும். ஏனெனில் நபிகளாரின் நினைவுச் சின்னங்களை சிதைத்து தங்களின் சின்னங்களை உருவாக்குவதற்குப் பெயர்தான் சுன்னத்தா? இல்லை. இது பச்சைத் துரோகம். இந்த அரபிகளுக்கு ஒரு சிறப்பு உலக அரங்கில் கிடைத்ததென்றால் அது யாரால் கிடைத்தது? இதற்கு ரஸூலுல்லாஹ் காரணமில்லையா?

**மூன்று:**

அந்த கிராதகர்களுக்கு நெஞ்சில் கொஞ்சங்கூட ஈரமில்லை. காரணம் அந்த மண்ணில் உறங்கிக்க கொண்டிருப்பவர்கள் யார்? அண்ணல் நபிகளாரின் இதயத் துண்டுகளல்லவா! அவர்களின் கண்மணிகளல்லவா! அது மட்டுமா! நபிகள் நாதரின் சிறிய தந்தையும் அவர்களின் மைந்தர்களுமல்லவா! மு.ஃ.மின்களின் தாய்களல்லவா! சொர்கக்த்தின் தலைவியல்லவா! இவர்களன்றி அவ்லியாக்களும், புகஹாக்களும், உலமாக்களும், ஹுகமாக்களும் அல்லவா அந்த மண்ணில் உறங்குகின்றனர். ஆனால் இந்த நஜ்திய வஹாபிகள் இந்நன்மக்களின் புனித மண்ணறைகளை எல்லாம் தகர்த்து, அங்கே மாளிகைகளல்லவா இப்போது கட்டுகின்றனர். இதையெல்லாம் கண்ட எனக்குள் ஒரு பதட்டம் ஏற்பட்டு எனது மேனியெல்லாம் நடு நடுங்கத் துவங்கிற்று. அதேநேரம் உள்ளம் எல்லாவற்றையுமே இழந்து விட்டதைப் போல் வெறுமையாகிப் போயிற்று.

**நான்கு:**

நான் முழுவதுமாக நொறுங்கிப் போனேன். அப்பால் என்னை உலுக்கி ஆகா சாஹிப்! பாத்திஹா ஓதுங்களென்றார். அதைக் கேட்ட நான் மலிக் சாஹிப்! எதற்காக பாத்திஹா? எனது கைகள் உயர வேண்டுமென இவர்கள் எதிர்பார்க்கிறார்களா? நாம் என்ன? நமது மன்னிப்புக்குரிய துஆ என்ன? நாம் இவர்களிடம் கையேந்துபவர்கள். நமக்கு மன்னிப்பு இவர்களின் பொருட்டால்தான் கிடைக்கும்.

நான் சொல்லிக் கொண்டிருந்தேன். பாத்திமா! ஸலாமுல்லாஹி அலைஹா நீ இன்றும் கர்பலாவில்தான் இருக்கிறாய். உனது தந்தையின் கலிமாவை ஓதுபவர்கள்தான் உன்னை இதுவரை வேதனைப்படுத்தி வந்துள்ளனர்'. உனது கதை ரத்தக் காயங்களின் கதை. நீ க.ஃ.பாவில் உனது தந்தையின் காயத்தை துடைத்தாய். கர்பலாவில் உனது குழந்தைகள் வெறித்தனமாக தாக்கப்பட்டனர். கூபாவில் உனது கணவர் உம்மத்துக்களால் தாக்கப்பட்டு இறப்பெய்தினார். உனது தந்தையின் உம்மத்துக்கள் உன் பிள்ளைகளை எப்போதுமே வேதனைக்குள்ளாக்கித்தான் வந்துள்ளனர். இன்று பதினான்கு நூற்றாண்டுகள் கடந்து விட்டன. உனது பிள்ளைகள் இப்போது கப்ரிலும் வேதனைப் படுத்தப்படுகின்றனர். அரப மண் முழுவதுமே உனது பிள்ளைகளைக் கொன்ற கொலைக் களம் தான். (அக்கப்ராளிகள் மீது அல்லாஹ்வின் ரஹ்மத் சொரியட்டும்)

**ஐந்து:**

பாத்திமா! உனது தந்தை சொன்னார். எனது மறைவுக்குப் பின் என்னை வந்து முதலில் சந்திப்பவர் நீதானென்று. நீ அவர்களிடம் சென்று விட்டாய். முஹம்மதின் வீட்டார் இன்றும் கர்பலாவில் கிடக்கின்றனர். இன்று அவர்களின் கப்ருகள் அழிக்கப்பட்டுப் போய்விட்டன. அதன்மீது என்னை அழவிடு. நீ இந்த கப்ருக்குள் இருக்கிறாய். நான் உன் முன்னால் உயிரோடு நின்று கொண்டிருக்கிறேன். எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. ஒரு சூனியத்தில் சஞ்சரிப்பதைப் போல் என்னை உணர்கிறேன்.

**ஆறு:**

அரபியருக்கு எவரது வரலாற்று பிண்ணனியின் மூலம் மதிப்பும் மரியாதையும் கிடைத்ததோ, அது க.ஃபத்துல்லாஹ்வும், ஹரமெ நபவியுமேயாகும். இவையனைத்தும் நபிகளாரால் பெற்றுத் தரப்பட்டவைகளாகும். இதில் மக்கா குப்பார்களின் பீடமாகவே அமைந்திருந்ததை ஷிர்க்கின் நிலைக்களமாக இருந்ததை மாற்றி ஏகத்தவத்தின் மர்கஸாக மாற்றியமைத்தவர்கள் நபிகள் நாதரல்லவா!

இன்று அரபைச் சேர்ந்த எத்தனை வாலிபர்கள் ஐரோப்பிய நாடுகளை சுற்றிப் பார்க்க செல்கின்றனர். அங்கெல்லாம் அவர்கள் பார்க்கவில்லையா? பிரான்ஸில் அவர்களது அரசர்களின் காலத்தில் அமைக்கப்பட்ட தூக்கு மேடையைக் கூட அதன் பழமை மாறாது இன்றும் பாதுகாத்து வருகிறார்களே! ரோம் நகரின் அரசர்கள் மனிதனுக்கும் மிருகங்களுக்குமிடையே சண்டையிட்டதை வேடிக்கைப் பார்த்த இடங்களைக் கூட பாதுகாத்’து வைத்துள்ளார்களே! பெர்லினில் ரஷ்யா தனது வெற்றியின் சின்னத்தை இன்றும் பாதுகாத்து வைக்கவில்லையா? ஆங்கிலேயர் தங்களின் புராதனமாக கட்டிடக் கலையையும் சக்ரவர்த்திகள் வசித்த மாளிகைகளையும் மந்திரிப் பிரதானிகள் குடியிருந்த வீடுகளைக் கூட அதன் புராதன நிலை மாறாது பாதுகாத்து தங்களின் பழமையை இன்றும் உலக அரங்கில் பெருமையாக காட்டிக் கொண்டிருக்கும் போது இவைகளெல்லாம் வணக்கத்திற்குரிய ஸ்தலங்களாகவா மாறி விட்டன?



*ஜன்னத்துல் பகீ கப்ருஸ்தானில் (மதீனா) உள்ள கப்ருகள் மீது கட்டப்பட்ட குப்பாக்கள் இடிக்கப்படும் முன் எடுக்கப்பட்ட புகைப்படம் 1925.*



*ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ரு மீது கட்டப்பட்டிருந்த குப்பா (மதீனா) இடிக்கப்பட்ட பின் உள்ள புகைப்படம்.*




ROZE-E-BIBI KHADIJA BEFORE DESTRUCTION MACCA

*அன்னை கதீஜா நாயகியார் ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கப்ரு மீது கட்டப்பட்ட குப்பா (மக்கா) இடிக்கப்படும் முன் எடுக்கப்பட்ட புகைப்படம். 1925.*



JANNATUL MOALA BEFORE DESTRUCTION MACCA


*ஜன்னத்துல் முஅல்லா கப்ருஸ்தானத்தில் கட்டப்பட்டிருந்த குப்பாக்கள் இடிக்கப்படும் முன் உள்ள புகைப்படம். 1925.*



*அன்னை கதீஜா நாயகியார் ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கப்ரு மீது கட்டப்பட்ட குப்பா இடிக்கப்பட்ட பின் உள்ள புகைப்படம்.*




*ஹஜ்ரத் பாத்திமா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கப்ரு மீது கட்டப்பட்ட குப்பா (மதீனா) இடிக்கப்படும் முன் எடுத்த புகைப்படம் 1925.*




ROZE-E-HAZRAT HAMZA
BEFORE DISCTRUCTION
(MADINA)

*ஹஜ்ரத் ஹம்ஸா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கப்ரு மீது கட்டப்பட்டிருந்த குப்பா இடிக்கப்படும் முன் உள்ள புகைப்படம். 1925.*



ROZA-E-HAZRAT ABDUL MUTALIB &
HAZRAT ABU TALIB (BEFORE DESTRICTION)
MACCA

*ஹஜ்ரத் அப்துல் முத்தலிப் ஹஜ்ரத் அபூதாலிப் அவர்களின் கப்ருகளின்மீது கட்டப்பட்டுள்ள குப்பாக்கள் இடிக்கப்படும் முன் உள்ள புகைப்படம் 1925.*




.

*ஹஜ்ரத் அப்துல் முத்தலிப் அவர்களின் கப்ரு ஷரீப் மீதுள்ள குப்பா இடிக்கப்பட்ட பின் உள்ள புகைப்படம்.*

இன்னும் அந்த யூத, கிறிஸ்துவர்கள் திருக்குர்ஆனின் பார்வையில் வழிகேட்டில் மூழ்கிக் கிடப்பவர்கள். அவர்களே தங்களின் புராதனமான சின்னங்களை வணக்கஸ்தலங்களாக மாற்றிடாத போது, ரஸூலுல்லாஹ்வின் பயிற்சியில் தவ்ஹீதைக் கற்றுக் கொண்ட முஸ்லிம்கள் மட்டும் தங்களின் இஸ்லாமியச் சின்னங்களையும், நன்மக்களின் கப்ருகளையும் வணகக்கத்திற்குரிய ஸ்தலங்களாக எவ்வாறு மாற்றிவிடுவர்? எந்த இடத்தில் பைத்துல்லாஹ்வும், அண்ணலாரின் ரவ்ழா ஷரீபும் இருக்கிறதோ அங்கே எந்த ஷிர்க்கும் பித்அத்தும் வந்து எவ்வாறு நுழைய முடியும்?

**கர்பலாவில் முஸ்லிம்களின் கோரக் கொலை**

அஹ்லெ பைத்துக்களின் பரிசுத்தத் தன்மை பற்றியும், அவர்கள் மீது நேசம் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் திருக்குர்ஆன் இன்றும் உலக இஸ்லாமிய மக்களை நோக்கி அறைகூவல் விடுத்துக் கொண்டுள்ளது.

قل لآاسءلكم عليه اجرا الاالمودة فى القربى

(

நபியே!) சொல்லுங்கள் நான் உங்களிடம் கூலி எதுவும் கேட்கவில்லை. மாறாக

எனது குடும்பத்தாரை நேசியுங்கள்.

அத்துடன் இஸ்லாத்தின் புனிதத்துவத்தையும் மகத்துவத்தையும் காத்திட நபிகளாரின் குடும்பத்தார் தனது ரத்தத்தையும் எந்த மண்ணில் சிந்தினார்களோ, முஸ்லிம்கள் அவர்களை நேசிப்பதொன்றுதான் அசல் ஈமானாகும் என்பதாக மார்க்க விற்பன்னர்கள் கூறிக் காட்டுகின்றனர். கர்பலாவுடைய சம்பவத்தில் யஜீதைப் பின்பற்றும் நஜ்திகளான வஹ்ஹாபிகள் எப்படிப்பட்ட கொலைவெறித் தாக்குதல் நடத்தினர் என்பதையும், இஸ்லாத்தின் புனிதத்தை காக்கிறோமென்னும் போர்வையில் அவர்கள் நடத்திய அராஜகத்தையும் பாருங்கள்.

### உஸ்மான் பின் பஷீர் நஜ்தீ கூறுகிறார்

ஹிஜ்ரி 1216ல் சவூத் தனது நஜ்திய படைகளுடன் கர்பலாவை சுற்றி வளைத்தார். தில்கஃதா மாதம் நஜ்திய சிப்பாய்கள் இமாம் ஹுஸைனின் நகரை முற்றுகையிட்டனர். அதன்பின் அவர்கள் நடத்திய தாக்குதலில் நகரிலுள்ள தெருக்கள் முழுவதும் பிணக்குவியலே காட்சியளித்தன. கொலைவெறித் தாண்டவத்தை நடத்தி முடித்தபின் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுவின் கப்ரின் மீதிருந்த குப்பாவைத் தகர்த்தெறிந்தனர். குப்பாவுக்கு மேல் பதிக்கப்பட்டிருந்த வைர வைடூரியங்களையும் யாக்கூத் கற்களையும் கொள்ளையடித்தனர். அதன்றி நகரில் வசித்துக் கொண்டிருந்த மக்களின் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடித்ததுடன் விரித்து படுக்கும் பாய் முதற் கொண்டு கொள்ளையிட்டு இரண்டாயிரம் அப்பாவி முஸ்லிம்களையும் கொன்று குவித்ததின் பின்னரே நஜ்துக்குத் திரும்பினர். நூல்: தாரீகெ நஜ்த், பாகம்1, பக்கம் 121, 122.

### இமாம் ஹஸனின் கப்ரு தரைமட்டமாக்கப்படல்.

நஜ்திய நாய்கள் நபிகளாரின் குடும்பத்தினர் மீது கொண்டிருந்த விரோதத்தின் கொலைவெறித் தாண்டவத்தை பார்த்த நீங்கள் இப்போது நபிகளாரின் மற்றொரு திருப்பேரர் கப்ரின் மீது நடத்திய மூர்க்கத்தனத்தையும் பாருங்கள். உஸ்மான் பின் பஷீர் நஜ்தி எழுதுகிறார்…

பின்னர் ஸவூத் ஜாமிஆ ஜுபைரை சுற்றி வளைத்த போது அங்கே ஜாமிஆ மஸ்ஜிதின் பக்கத்திலிருந்த குப்பாக்களையும், கப்ருகளையும் நகருக்கு வெளியேயிருந்த இஸ்லாமிய சின்னங்களையும் கப்ருகளையும், குப்பாக்களையும் தகர்த்தெறிந்தார். இதில் இமாம் ஹஸன், ஹஜ்ரத் தல்ஹாவின் மீது கட்டப் பட்டிருந்த குப்பாக்களும் தகர்த்தெறியப்பட்டன. இன்னும் அக்கப்ருகள் அங்கே இருந்ததற்கான அடையாளம் கூட தெரியாவண்ணம் முழுவதும் தரைமட்டமாக்கப்பட்டன.

ஸவூத் தர்இய்யாவுக்குத் திரும்பிச் சென்றபின் மறுபடியும் ஹஜ்ரத் தல்ஹா, இமாம் ஹஸனின் கப்ருகள் மீது குப்பாக்களை அங்கிருந்த முஸ்லிம்கள் கட்டினர். இதைக் கேள்விபட்ட சவூத் மீண்டும் தனது படைகளை அனுப்பி அந்த குப்பாக்களை இடித்தெறிந்ததோடு அதனை ஆதரித்த முஸ்லிம்களையும் கொன்று குவித்தார்.
நூல்: தாரீகெ நஜ்த், பாகம் 1, பக்கம் 132.

### நபியின் விரோதி இப்னு சவூதின் முடிவு

கா்பலாவின் மண்ணில் நடைபெற்ற நஜ்திகளின் வெறியாட்டத்தை விபரித்த சா்தாா் ஹஸனீ எழுதுகிறாா்...

> முஹம்மத் பின் சவூத் கி.பி. 1764 ல் இறந்து பட்டாா். அதன் பின் அவரது மகன் அப்துல் அஜீஸ் தந்தையின் ஸ்தானத்திற்கு வந்தாா். தந்தை உயிரோடிருக்கும்போதே தான் அமீராக பதவியேற்று வருடத்தில் ஆறு போா்களும் குறைவின்றி நடத்தினாா்.(இப்போா்கள் அனைத்தும் முஸ்லிம்களோடு நடத்தப்பட்டவைகளாகும்.) அதன்பின் அவரது மகன் மஸ்வூத் கடுங்கோபியாக வெளிவந்தாா். இவா் தனது தந்தையைக் கேட்காமலேயே நஜ.ஃப், கா்பலாவை ஆக்ரமித்தாா். அங்கிருந்த கப்ருகளையெல்லாம் இடித்து தரைமட்டமாக்கினாா். அவா் அடித்த கொள்ளைகள் கணக்கற்றவை. அப்போது நஜ்திலிருந்தவா்கள் மகா கொடுமைக் காரா்களாகவும் தீய நடத்தை உடையவா்களாகவும் வரம்பு கடந்தோராகவும் இருந்தனா். இந்நிலையில் கி.பி. 1802ல் ஒரு ஷியா பிரிவைச் சாா்ந்தவா் தா்இய்யாவுக்கு வந்து சோ்ந்தாா். அவா் சுல்தான் அப்துல் அஜீஸ் மஸ்ஜிதில் தொழுது கொண்டிருந்த போது அவரை வெட்டிக் கொன்று விட்டாா்.

இச்சம்பவத்தை அன்று சவூதி அரசு இஸ்லாமிய முலாம் பூசி மறைக்கப் பாா்த்தது. எனினும் முஸ்லிம்கள் இச்சம்பவத்தை சுல்தான் அப்துல் அஜீஸ் அஹ்லெ குற்றத்திற்குரிய தண்டனை என்றுதான் கூறினா்.

**ஒரு பாா்வையாளரின் ஆன்மா புலம்புகிறது.**

மௌலானா முஹம்மத் அலி ஜௌஹா் டில்லி ஜும்ஆ மஸ்ஜிதில் வைத்து நிகழ்த்திய உரையைக் கேளுங்கள்.

> நான் இறைவனுடைய இல்லத்தில் அமா்ந்திருக்கிறேன். இன்னும் அவன் எனக்கு முன்னிருந்து என்னை நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை உணா்ந்தவனாக உங்கள் முன் பேசுகிறேன். எனக்கு இப்னு சவூதின் மீது தனிப்பட்ட எந்த விரோதமுமில்லை. நான் எதைக் கண்டேனோ அதை மட்டுமே சொல்கிறேன்.அதுவும் தெளிவாகச் சொல்கிறேன்.நான் சொல்வதைக் கேட்டு என் மீது சந்தோஷமடைந்தாலும் சரி, அல்லது வெறுப்படைந்தாலும் சரி.
> சுல்தான் இப்னு சவூதும் அவரது ஆட்சியாளரும் அடிக்கொரு தரம் குா்ஆன், சுன்னத்தைப் பற்றி பேசுகின்றனா். ஆனால் நான் அவா்களிடம் கண்டவை அவா்கள் குா்ஆனையும் சுன்னத்தையும் உலக ஆதாயத்திற்காக பயன்படுத்திக் கொண்டுள்ளனா் என்பதே. சிலா் கொள்ளையடிக்கின்றனா். திருடுகின்றனா். தீய செயல் புரிகின்றனா். ஆனால் யாா் குா்ஆன் ஹதீஸ் என்னும் வாா்த்தையைக் கூறி அதைக் கொண்டு தங்களின் உலக வாழ்வின் சுகத்தை தேடுகின்றனரோ, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகின்றனரோ அவா் கொள்ளையரை விட திருடனை விட மிகக் கெட்டவா்கள்.
> நூல்: மகாலாத்தே முஹம்மத் அலீ பாகம் 1 பக்கம் 95, 96.

இதையும் படியுங்கள்...

> நஜ்திகளின் செயல்பாடு யாதெனில் முஸ்லிம்கள் ஆம்! முஸ்லிம்களின் ரத்தம் மட்டும்தான் அவா்களின் கரங்களை நனைத்திருக்கிறது. நூல்: மகாலாத் பக்கம் 37.

இத்துடன் கிலாபத் கமிட்டியைச் சோ்ந்தவா்கள் தங்களின் கண்களால் கண்ட ஒரு சம்பவத்தையும் பாருங்கள். அதில் மதீனாவிலிருந்த ஒரு கூட்டத்தில் நஜ்தின் காஜியொருவா் மதீனாவின் உலமாக்களை நோக்கி கீழ்கண்டவாறு சொல்கிறாா்...

ياأهل حجاز انتم اشدكفرا من هامان وفرعون فنحن قاتلناكم مقاتلته المسلمين مع الكفار انتم عباد حمزه وعبدالقادر

ஓ! ஹிஜாஸ்வாசிகளே! நீங்கள் ஹாமான் பிர்அவ்னை விட கொடூரமான காபிர்கள். நாங்கள் உங்களை காபிர்களை வெட்டுவதைப் போன்று வெட்டுவோம். நீங்கள் ஹம்ஜாவையும், அப்துல் காதிரையும் பூஜிக்கின்றவர்கள். நூல்: ரிப்போர்ட் பக்கம் 85.

நாடு பிடிக்கும் ஒரு திறமையான வார்த்தை நஜ்திகளிடம் என்ன தெரியுமா? இந்த வார்த்தையை அவர்களுக்கு கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு வரை போதிக்கப்பட்டும் வந்துள்ளது. அது, அவர்களைத் தவிர உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவருமே முஷ்ரிக்குகள் என்பதுதான். இன்னும் நஜ்திகளின் கடந்த கால வரலாறும் நமக்கு உணர்த்துகின்ற விஷயம் யாதெனில், அவர்களின் கரங்கள் எப்போதுமே காபிர்களின் ரத்தத்தில் நனைந்ததே இல்லை. இனி அவர்கள் வெட்டிக் கொன்றார்கள் எனில், அது முஸ்லிம்களை மட்டும்தான் என்பதை மிக அழுத்தந்திருத்தமாக சொல்லலாம்.

நூல்: ரிப்போர்ட் வ.ஃப்ர் கிலாபத், பக்கம் 105.

இன்று மக்கா, மதீனா போன்ற உலக முஸ்லிம்களுக்குச் சொந்தமான புண்ணிய ஸ்தலங்களை ஆக்ரமித்து ஆட்சி செய்து வரும் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாபுடைய வம்சத்தாரும், முஹம்மத் பின் சவூதுடைய வம்சத்தாரும் மக்காவின் ஹரம் ஷரீபில் போடப்பட்டிருந்த நான்கு மத்ஹபுக்குரிய முஸல்லாவையும் தூக்கியெறிந்து விட்டு தங்களின் வஹ்ஹாபியக் கொள்கையான பிரிட்டிஷார் வடிவமைத்துத் தந்த கொள்கையை உலக முஸ்லிம்களிடையே பரப்பத் திட்டமிட்டு அதனை பல்வேறு பிரிவினை வாதக் கும்பலின் மூலம் உலகின் பல பாகங்களிலும் பரப்பி வருகின்றனர்.

ஹஜ்ஜுக்கு செல்லும் ஹாஜிகளில் எவரும் மக்காவிலுள்ள ஜன்னத்துல் முஅல்லாவின் கப்ரஸ்தானிலோ அல்லது மதீனாவிலுள்ள ஜன்னத்துல் பகீயின் கப்ரஸ்தானிலோ சென்று ஜியாரத்து செய்வதையும், அண்ணல் நபிகளாரின் ரௌழா ஷரீபை நோக்கி தங்களின் ரஸூலை வஸீலாவாக்கி துஆ செய்வதையும் தமது போலீஸ் பலத்தைக் கொண்டு முரட்டுத்தனமாக அடக்கி வருகின்றனர்.

அத்துடன் இஸ்லாம் இந்த நஜ்திகளின் பாட்டன் வீட்டு சொத்தென எண்ணிக் கொண்டு இஸ்லாம் அனுமதிக்கின்ற நற்செயல்களை எல்லாம் ஷிர்க்கென்றும், பித்அத்தென்றும் கூறி இஸ்லாத்தின் ஆத்மார்த்தமான உயிரோட்டத்தை விட்டு இஸ்லாமிய மக்களை ஒரு சடங்குவாதிகளாக்க முயன்று வருகின்றனர். இன்னும் உலக அரசியல் அரங்கில் இந்த சவூதி அரசின் உறவு முறை அனைத்தும் முஸ்லிம் நாடுகளல்லாத திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு விரோதிகளென எச்சரிக்கை செய்த யூத, கிறிஸ்துவர்களுடன்தான் நல்லுறவு கொண்டுள்ளனர்.

இன்று அரபு மண்ணில் இஸ்ரேல் என்னும் ஒரு புதிய தேசத்தின் பிறப்புக்கு மூல காரணகர்த்தாவே சவூதி அரசுதான் என்றால் இது ஆச்சரியத்திற்குரிய ஒரு விஷயம் அல்ல. அத்துடன் இந்திய தேச முஸ்லிம்கள் இன்று ஒற்றுமையிழந்து பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சிக்குள்ளாகி கல்வித் தரத்தில் சரிந்து போய்

இருக்கின்றனா் எனில், இதனை தமது பணபலத்தால் சாதித்தவா்கள் இன்றுள்ள சவூதி அரசுதான் என்பதை என்று நமது இஸ்லாமிய மக்கள் புரிந்து கொள்வார்களோ அன்றுதான் இந்திய முஸ்லிம்கள் தங்களின் இழந்த மரியாதையைத் திரும்ப பெறுவார்கள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

*அடுத்த பாகம் தொடரும்...*




*சவூதி நஜ்திய நாய்கள் முஸ்லிம்களின் இடங்களை ஆக்கிரமித்த போது அப்பகுதிகளில் நியமிக்கப்பட்ட நஜ்திய ஆட்சியாளர்கள்.*




**Al-Saud ( La'een ) Family.**

**Sharif, Abd Al Aziz, Next to Abdal Aziz is Awad Bin Laden Father of Bin Laden.
Abd al Aziz awarded the task to awad bin Laden for the Destruction of [ Holy Shrines Jannatu l-Baqi' (جنة البقيع) ]**

**Which is did very efficiently, he was immediately asked to Destroy all the signs or the Shrines and Holy Graves in Jannat Al Moallaa.
Abd Al Aziz gave him all the contracts inside the Saudi Arabia and Awad Bin Laden Became the owner of the world Largest Construction Company.**

*இன்றைய உலகில் இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதம் பரவ காரணமாக இருந்தவர்களின் புகைப்படம்-புனிதமிகு மக்கா, மதீனாவில் மகான்களின் கப்ருகளை இடித்த வஹ்ஹாபிய கயவர்கள். இதில் அப்துல் அஜீஸ்ஸிற்கு அடுத்தார் போல் அவாது பின்லேடன்(பின்லேடனின் தகப்பனார்) இருக்கிறார். இவர் கப்ருகளை இடிப்பதற்கு உறுதுணையாக இருந்ததால் சவூதிய வமிசம் அவரின் குடும்பத்தாருக்கு அரசு கட்டிட ஒப்பந்தங்களை வழங்கி வருகிறது. தற்போது உலகில் மிகப் பெரிய கட்டிட காண்ட்ராக்ட் கம்பெனி இவருடையது*